# மட்டக்களப்பு மாநகர சபையின் அறுபதாவது சபை அமர்வுக்கான கூட்டறிக்கை. 12-05-2022

மட்டக்களப்பு மாநகர சபையின் அறுபதாவது சபை அமர்வு (50வது பொதுக் கூட்டம்) 2022-05-12ம் திகதி (வியாழக்கிழமை) மு.ப. 09:30 மணிக்கு மாநகர சபா மண்டபத்தில் கௌரவ மாநகர முதல்வர் திரு. தியாகராஜா சரவணபவன் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

**சமூகமளித்த சபை உறுப்பினர்கள்:**

01. கௌரவ பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன்
02. கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் நிஸ்கானந்தராஜா
03. கௌரவ உறுப்பினர் ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை
04. கௌரவ உறுப்பினர் தம்பிராஜா இராஜேந்திரன்
05. கௌரவ உறுப்பினர் கந்தசாமி ரகுநாதன்
06. கௌரவ உறுப்பினர் விஜயகுமார் பூபாலராஜா
07. கௌரவ உறுப்பினர் சிவானந்தன் மேகராஜ்
08. கௌரவ உறுப்பினர் புஸ்பராஜ் ரூபராஜ்
09. கௌரவ உறுப்பினர் துரைசிங்கம் மதன்
10. கௌரவ உறுப்பினர் யூசைமுத்து பிலிப்
11. கௌரவ உறுப்பினர் சிவம் பாக்கியநாதன்
12. கௌரவ உறுப்பினர் சச்சிதானந்தம் கமலரூபன்
13. கௌரவ உறுப்பினர் சீனித்தம்பி ஜெயந்திரகுமார்
14. கௌரவ உறுப்பினர் மாசிலாமணி தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராசா
15. கௌரவ உறுப்பினர் அப்துள்காதர் முகம்மது லத்தீப்.
16. கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் ரூபாகரன்
17. கௌரவ உறுப்பினர் அந்தோனி கிருரஜன்
18. கௌரவ உறுப்பினர் மாசிலாமணி சண்முகலிங்கம்
19. கௌரவ உறுப்பினர் இராசலிங்கம் அசோக்
20. கௌரவ உறுப்பினர் சிவராசா சிவராஜ்
21. கௌரவ உறுப்பினர் செல்வராசா குமார்
22. கௌரவ உறுப்பினர் திருமதி. மேரி கிறிஸ்டினா சசிதரன்
23. கௌரவ உறுப்பினர் திருமதி. சாரதாதேவி கங்கேஸ்வரன்
24. கௌரவ உறுப்பினர் திருமதி சசிகலா விஜயதேவா
25. கௌரவ உறுப்பினர் திருமதி. பற்றிமா பல்தசார்
26. கௌரவ உறுப்பினர் தெய்வநாயகம் சிவலிங்கம்
27. கௌரவ உறுப்பினர் பேரின்பசாமி சுரேஸ்குமார்
28. கௌரவ உறுப்பினர் வடிவேல் குபேரன்
29. கௌரவ உறுப்பினர் திருமதி. வர்ணேஸ்வரி ரவிச்சந்திரன்
30. கௌரவ உறுப்பினர் ஸ்ரீபன் ராஜன்
31. கௌரவ உறுப்பினர் செல்வி. தயாளகுமார் கௌரி
32. கௌரவ உறுப்பினர் திருமதி.சிவாகரன் சுலக்ஷனா
33. கௌரவ உறுப்பினர் ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார்
34. கௌரவ உறுப்பினர் தம்பிப்பிள்ளை சிவானந்தராஜா
35. கௌரவ உறுப்பினர் சூசைமுத்து கிளனி வசந்தகுமார்.

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்:**

01. திரு.என்.மதிவண்ணன் - மாநகர ஆணையாளர்.
02. திரு.உ.சிவராஜா - மாநகர பிரதி ஆணையாளர்.
03. திரு.சி.ராஜ்மோகன் - பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - சபைப்பகுதி.
04. திரு.எஸ்.சிவபுண்ணியமூர்த்தி - ஆராச்சி.
05. திரு.எஸ்.ஜயந்தன் - அலுவலக பணியாளர் ( ஒளிப்பதிவுக் கடமை)
06. திரு.எஸ்.இ.இருதயராஜன் - ஓய்வு பெற்ற அலுவலக பணியாளர் (வீடியோ பதிவு)
07. திரு.எஸ்.நிக்சன் - வர்ணம் தீட்டுபவர் (ஒலித் தொகுதி ஒழுங்கமைப்பாளர்)

## ➢ இறைவணக்கம்

கௌரவ முதல்வர் அவர்கள் சபைக்கு வருகை தந்தவுடன் அவரால் அறிவிக்கப்பட்டதற்கமைய ஒரு நிமிட இறை வணக்கம் இடம் பெற்றது.

## ➢ தலைமை உரை

கௌரவ முதல்வர் அவர்கள் தமது உரையினை நிகழ்த்துகையில், இன்றைய 60வது சபை அமர்விற்கு வருகை தந்திருக்கும் கௌரவ பிரதி முதல்வர் அவர்களே, மாநகர சபையின் கௌரவ உறுப்பினர்களே, மாநகர ஆணையாளர் அவர்களே, பிரதி ஆணையாளர் அவர்களே, உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த வணக்கம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சூழ்நிலை, அதனை தொடர்ந்து ஏற்பட்டுள்ள மின் தடை காரணமாக இக் கூட்டத்தினை மிகச் சுருக்கமாக நடாத்துவதற்கு கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். இன்றைய சபை அமர்விற்கு கௌரவ உறுப்பினர் திரு.மொகமட் உசனார் மொகமட் நிப்லார் அவர்களுக்கு பதிலாக வருகை தந்த கௌரவ உறுப்பினர் திரு.அப்துள்காதர் முகம்மது லத்தீப் அவர்களை வரவேற்பதோடு, அவரும் எம்மால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பாக இருப்பார் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

புதிய ஆணையாளர் மாநகர சபையில் கடமையைப் பொறுப்பேற்றதன் பின்னரான மிகக் குறுகிய காலத்தில் பல அபிவிருத்திச் செயற்பாடுகளை நாம் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றோம். மிக விரைவாக அபிவிருத்தி வேலைகளை நிறைவுறுத்த வேண்டிய காலத்திற்குள் நாம் இருப்பதனால் ஆணையாளர் அவர்கள் திட்டமிடப்பட்ட வேலைகளின் விபரங்களை உடன் தயாரித்து மிக விரைவாக அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என வினயமாக கேட்டுக் கொள்வதோடு, மின் தகனசாலையினை நிர்மாணிப்பதற்காக மட்டக்களப்பு மாநகர சபையினால் கேள்வி கோரப்பட்டிருந்த நிலையில், இன்றைய தினம் அதற்கான கேள்வி திறக்கப்படவுள்ளது. இதற்கு முன்னர் 3 தடவைகள் அதற்காக கேள்வி கோரப்பட்டிருந்தும் சரியான ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படாமையால் மீண்டும் கோரப்பட்டுள்ளது. அதன்படி மிக விரைவாக அவ் வேலையினை நிறைவுறுத்தி பொது மக்களுக்கு கைளிப்பதற்கு நிர்வாக தரப்பினரால் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.

இதன் போது கௌரவ உறுப்பினர் திரு. துரைசிங்கம் மதன் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, ஏற்கனவே 3 தடவைகள் இதற்காக கேள்வி கோரப்பட்டும் சரியான ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்பட்டவில்லை என குறிப்பிட்டிருந்தீர்கள். தற்போது மீண்டும் கேள்வி கோரப்பட்டுள்ள நிலையில், அதற்கான ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டால் அதற்கான மாற்று

ஒழுங்குகளைப் பற்றியும் இங்கு பேச வேண்டும். அதேநேரம் எங்களது காலத்தில் இதனைச் செய்யக் கூடாது என நிர்வாக தரப்பினர் ஏதும் தடங்கல்களை ஏற்படுத்தி வருகின்றார்களா? என்பது தொடர்பில் சரியான விளக்கத்தினையும் எமக்கு கூற வேண்டும். ஏனெனில் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கும் மேலாக இவ்விடயம் பேசப்பட்டு வருவதுடன் மின் தகனசாலை அமைக்கப்படாமையால் பல வேப்ப மரங்கள் அளிக்கப்பட்டு வருவதுடன், இதனால் பொது மக்களும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். எனவே இது இறுதியான தீர்மானமாக இருக்க வேண்டும் அல்லது மாற்று ஒழுங்கு என்ன என்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இதற்குப் பதிலிறுத்துப் பேசுகையில், முதல் தடவை ஒப்பந்தம் கோரப்பட்ட போது எந்த விண்ணப்பங்களும் கிடைக்கப் பெறவில்லை. இரண்டாவது தடவை ஒரு விண்ணப்பம் மாத்திரமே கிடைக்கப் பெற்றது. இருந்தும் அவ் விண்ணப்பம் எமது மதிப்பீட்டினை விட 28% அதிகமாகக் காணப்பட்டதன் காரணமாக அதனை எமது தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு சிபார்சு செய்யவில்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் ஒப்பந்தகாரர்கள் சரியான முறையில் விண்ணப்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது என நினைக்கின்றேன். எனவே இது எங்களது நிதியில் மேற்கொள்ளப்படுவதால் நாமே தொகையினை தீர்மானித்து வழங்கலாம். அதேபோல் 2021ம் ஆண்டு மற்றும் 2022ம் ஆண்டுகளுக்கான வேலைகளைக் கூட இதுவரை முடிக்காத நிலையில் எமது பொறியியலாளர் பிரிவு மிக மந்தமான நிலையில் செயற்பட்டு வருகின்ற காரணத்தினால் அவற்றை மாநகர சபை தனியாக செய்து முடித்து பொது மக்களுக்கு வழங்குவதென்பது ஓர் சவாலான விடயம். நாம் அதனை வெளியாருக்கு ஒப்பந்தம் ஊடாக வழங்கி அவற்றை நிறைவுறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. இன்று கூட பொறியியலாளர் இங்கு வருகை தரவில்லை. பல தடவைகள் அறிவுறுத்தல் வழங்கியும் அவர் அவற்றை செயற்படுத்தவில்லை. எனவே ஆணையாளர் உரிய முறையில் இதற்கான விசாரணைகளை செய்ய வேண்டும் அல்லாது விட்டால் மாநகர சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாகக் கொண்டு செல்ல முடியாது. எங்களால் நிதிகளை அரசின் மூலமாகவும், நிறுவனங்கள் மூலமாகவும் கொண்டு வர முடிந்துள்ளது. ஆனால் அதனை செயற்படுத்த நிர்வாக ரீதியான ஒத்துழைப்புகள் எமக்கு கிடைக்கப் பெறவில்லை எனவும் தெரிவித்தார்.

இதன் போது கௌரவ உறுப்பினர் திரு. துரைசிங்கம் மதன் அவர்கள் மீண்டும் குறுக்கிட்டுப் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே! இதில் மன வேதனையான விடயம் என்னவென்றால், சபையால் அனைத்து தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டு, அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதனை செயற்படுத்துவதற்கு நிர்வாக தரப்பினரின் செயற்பாடுகளால் கால தாமதப்படுத்தப்பட்டு வரும் நிலை காணப்படுகின்றது. இந்த சபையின் காலம் முடிவடைந்து மேலதிகமாக ஒரு வருடம் நீடிக்கப்பட்டுள்ள நிலையில், சபை இன்று கலையுமா? அல்லது நாளை கலையுமா? எனத் தெரியாது. சபையின் காலம் முடிந்த பிற்பாடு நீங்கள் செய்த சேவைகள் என்ன? என மக்கள் எம்மிடம் கேள்வி கேட்பார்கள். இந்த சபையில் பல நல்ல திட்டங்களுக்கு அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்கி வரும் நிலையில், நிர்வாகத்தினரின் செயற்பாட்டால் வேலைகளை துரிதமாக மேற்கொள்ள முடியாதுள்ளது. தற்போது மின்சாரம் இல்லாமல் இக் கூட்டம் நடைபெறுகின்றது. புதிய மின்பிறப்பாக்கி ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னரே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் இன்று வரை அது கொள்வனவு செய்யப்படவில்லை. இன்று கூட பொறியியலாளர் இங்கு வருகை தரவில்லை. மாநகர சபையில் ஆரம்பத்திலிருந்த நிர்வாகம் திறமையாக செயற்பட்டது. தற்போது வந்துள்ள புதிய ஆணையாளர் பதவியேற்ற பின்னராக கடந்த ஒரு மாத காலம் பல முன்னேற்றகரமான செயற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆனால் இடைப்பட்ட காலம் மாநகர சபையிலிருந்த மக்களின்

செயற்பாடுகளை மக்கள் உணர வேண்டும். ஊடகங்கள் இதனை அவர்களிடத்தில் கொண்டு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் தலைமை உரையினைத் தொடர்கையில், கடந்த ஆண்டு மாநகர சபையின் நிதியில் கட்டடங்கள் திணைக்களத்தின் ஊடாக கலாசார மண்டபங்களை அமைப்பதற்கு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது முன்னாள் ஆணையாளரும் பொறியியலாளரும் இணைந்து அவ் வேலையினை மாநகர சபையினால் செய்வோம் என கடிதங்கள் எழுதி கட்டடங்கள் திணைக்களத்திடமிருந்து அதனை மீளப் பொறுப்பேற்றுக் கொண்டனர். இருந்தும் அதன் பின்னர் அது தொடர்பில் அவர்களால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இருந்தும் பொறியியலாளர் பிரிவுக்குரிய வாகனச் செலவுகள், விடுமுறைக் கொடுப்பனவுகள், மேலதிக நேரக் கொடுப்பனவுகன் போன்றவை வழங்கப்பட்டே வருகின்றன. எதிர்காலத்தில் பொறியியலாளர் வினைத்திறனாக செயற்படாதவிடத்து சபைத் தீர்மானமொன்றின் ஊடாக அவருக்குப் பதிலாக வேறு பொறியியலாளர் ஒருவரை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டிருக்கின்றது. எனவே மிக விரைவில் ஆணையாளர் இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காதவிடத்து பொறியியலாளரை இங்கிருந்து வெளியேற்றுவதை தவிர வேறு வழிகள் இல்லை. பொறியியலாளரின் செயற்திறன் இன்மையால் தான் நாங்கள் பொறியியல் ரீதியான ஆலோசனைக் குழு ஒன்றினையும் ஸ்தாபித்து இருக்கின்றோம். எனவே புதிய ஆணையாளருக்கு மிகப் பெரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. எந்த நிறுவனத்திலும் நிதி ஏற்பாடுகள் இல்லை. ஆனால் மாநகர சபையில் அதற்குரிய வழி வகைகள் உள்ளன. அதனை சரியாகப் பயன்படுத்தி பொது மக்களுக்கான சேவைகள் மிக விரைவாக அவர்களைச் சென்றடையக் கூடிய வகையில் உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, ஏற்கனவே பதில் வேலைகள் அத்தியட்சகர் ஒருவரை நியமிக்க வேண்டும் என சபை தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர் நியமிக்கப்பட்டுள்ளாரா? அடுத்து பொறியியலாளர் இல்லாவிட்டால் அங்கு பல உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள். அதற்கு அடுத்த நிலையிலுள்ள அலுவலகர் கூட்டத்திற்கு வர வேண்டும். அவர்கள் சபை வேலைகளை மேற்கொள்ளக் கூடாது என திட்டமிட்டு செயற்படுகின்றார்கள். எமக்கு தற்போது இருப்பது நாட்களோ, வாரங்களோ, மாதங்களோ தெரியாது. எனவே தயவு செய்து இங்கு மாநகர ஆணையாளர், பிரதி ஆணையாளர் ஆகியோர் இருக்கின்றீர்கள், நீங்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்து எதிர்வரும் காலங்களில் இதற்கு இடமளிக்க கூடாது. அடுத்து சுகாதார குழுவின் தலைவர் அவர்கள் 90 நாள் வேலைத் திட்டத்திற்கு எந்த உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள் இல்லையெனத் தெரிவித்தார். எனக்கு வேதனையாக இருந்தது. நகரைச் சென்று சுற்றிப் பாருங்கள். குப்பை கூழங்கள் வடிகான்களுக்குள் நிறைந்து வழிகின்றன. இதனால் கௌரவ முதல்வர், கௌரவ உறுப்பினர்கள், ஆணையாளர் ஆகியோருக்குத் தான் மரியாதையில்லை. வெட்கமாக இருக்கின்றது. எனவே மதிப்பிற்குரிய ஆணையாளர் அவர்களே, இந்த 90 நாள் செயற்திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை சபை உறுப்பினர்களான நாம் வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, நாங்கள் அபிவிருத்தி செயற்பாடுகள் பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கின்றோம். எமது மாநகர சபையானது மக்களின் வரிப் பணத்தினைக் கொண்டு பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செய்ய வேண்டும் என்பதற்காக பல முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளோம். அந்த வகையிலே இன்று இந்த நாட்டினிலே பொருளாதார பிரச்சனைகள், அரசியல் பிரச்சனைகள்

ஏற்படுத்தப்பட்டு அதனூடாக மக்களின் வயிற்றினிலே நெருப்பு வார்க்கப்பட்டதினால் அது இன்று பல இடங்களிலும் தீப்பிளம்பாக காட்சியளிக்கின்றது. தற்போதைய பொருளாதார அரசியல் நெருக்கடிகளால் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில் எம்மால் அபிவிருத்திச் செயற்பாட்டுடன் வாழ்வாதார நலத்திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும் என்பதற்காக எமது இவ்வருட பாதீட்டில் அவ்விடயமும் உள்வாங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருந்த போதிலும் அபிவிருத்திச் செயற்பாடுகளையே முன்னிறுத்தி மேற்கொண்டு வருகின்றோம். எனவே அபிவிருத்தியை விட தற்காலத்தில் வாழ்வாதார நலத்திட்டங்களை முன்னெடுப்பதே சிறந்ததாக இருக்கும் எனக் கூறிக் கொள்வதோடு, வட்டார ரீதியாக கௌரவ உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ள வாழ்வாதார பயனாளிகளின் விபரப் பட்டியலினை கவனத்தில் கொண்டு அதனை உடன் நடைமுறைப்படுத்துமாறும் தயவாகக் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே! இவ்வேளையில் அனைவரையும் விழித்தவனாக, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்கள் நிர்வாகத் தரப்பினரால் நடைமுறைப் படுத்தப்படவில்லை என கூறப்படுகின்றது. வினைத் திறனற்ற நிர்வாகம் எனவும் கூறப்படுகின்றது. பொறியியலாளர் பிரிவு உட்பட அந்தந்த துறைசார் பிரிவினர்கள் அதற்குரிய பொறுப்புக்களைக் கூற மறுக்கின்றார்கள் எனக் கூறப்படுகின்றது. எனவே சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை ஏன் நடைமுறைப்படுத்த முடியாது? என அறிக்கையாக எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும். காரணம் சபை கலைந்த பின்னர் நிர்வாக தரப்பினருக்கு சபை ஒத்துழைப்பு வழங்கவில்லை, சபை சரியில்லை என்றெல்லாம் கூறுவார்கள். ஆகவே நிர்வாக தரப்பினர் ஏன் சபைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாது முடக்குகின்றார்கள்? என்பதற்கான அறிக்கை பெறப்பட வேண்டும். அல்லது சபையின் கௌரவ உறுப்பினர்களை கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஒழுங்குகளை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், கௌரவ உறுப்பினரின் முன்மொழிவு சிறந்ததோர் முன்மொழிவு. எனவே அதனை நான் ஆணையாளரிடமே ஒப்படைக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே! நீங்கள் ஒரு நிபுணர் குழுவினை உருவாக்கியிருந்தீர்கள், அந்தக் குழுவிற்கு சபையும் அங்கீகாரம் வழங்கி சில அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனவே பொறியியலாளர் பிரிவிற்கு வேலைப்பழு அதிகம் என்றால் அந்த நிபுணர் குழுவின் அறிக்கையுடன் செலவு மதிப்பீட்டினை தயாரித்து சபை அங்கீகாரத்துடன் அபிவிருத்தி பணிகளை நேரடியாக முன்னெடுக்க முடியும். நாங்கள் ஆரம்பத்திலிருந்தே ஒவ்வொரு மாதத்திற்குரிய வேலை விபரங்களை சபையில் சமர்ப்பித்திருக்க வேண்டும். பிழை விட்டிருக்கின்றோம். தொடர்ந்து பொறியியலாளர் பிரிவினைக் குற்றச் சாட்டியிருக்கிறோம், அவர்கள் தொடர்ந்து வேலை செய்ய முடியாத நிலையிருக்கும் போது, சபையின் அங்கீகாரத்தின் ஊடாக உரிய ஏற்பாடுகளுக்கு அமைய இதனை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே! நாமும் இதே மாநகரத்தைச் சேர்ந்தவர்கள் தான். எமது மாநகர மக்களின் வரிப் பணம் வீணாவதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. அபிவிருத்திப் பணிகளை நடைமுறைப்படுத்த தவறும் உத்தியோகத்தர்களுக்கு சபையின் ஊடாக வழங்கப்படும் கொடுப்பனவுகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும். வெறுமனே அலுவலகம் வந்து பத்திரிகைகளை வாசித்து விட்டு செல்வதற்கு அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, நிதிக் குழுவில் அங்கம் வகிப்பதால் நான் இதனைக் கூறியே ஆக வேண்டும். நிதிக் குழுக் கூட்டங்களில் உத்தியோகத்தர்களுக்குரிய கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் என்றே சில உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுக்கின்றார்களே தவிர அவர்களின் முன்கூட்டிய வேலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதில்லை. இது சபை ஆரம்பித்த காலத்திலிருந்தே தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இனிவரும் காலங்களிலும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டது போன்று பணிகளை பொறுப்பாக ஆற்றாத உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்திற்கான முற்கொடுப்பனவை வழங்கக் கூடாது என ஆணையாளர் அவர்களுக்கு தீர்மானம் ஒன்றினை மேற்கொண்டு கொடுப்போம் எனவும் தெரிவித்துக் கொண்டு எனது தலைமை உரையை நிறைவு செய்த கொள்கின்றேன்.

## ➢ கடந்த சபை அமர்விற்கான கூட்டக் குறிப்புகளை உறுதிப்படுத்தல்.

1. 04.03.2022ம் திகதிய 58வது அமர்வுக்கான (48வது பொதுக் கூட்டம்) கூட்டறிக்கையை உறுதிப்படுத்தல்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், குறித்த அமர்விற்கான நிகழ்ச்சி நிரலில் கடந்த கூட்டறிக்கை தொடர்பான விடயம் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், தொடர்ச்சியான மின் வெட்டு மற்றும் ஊரடங்கு சட்டம் காரணமாக பிரதி செய்து வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இக்கூட்டறிக்கையும் அடுத்த சபை அமர்வினில் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும் என்பதும் சபையினர்க்கு தெரிவிக்கப்பட்டு அது சபையினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## 01. கௌரவ முதல்வர் அவர்களின் அறிவிப்புக்கள்:

1. இன்றைய சபை அமர்விற்கான நிகழ்ச்சி நிரலில் பல விடயங்கள் இருப்பதனை தாங்கள் அறிந்திருப்பீர்கள். நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக நிகழ்வுகளை உரிய நேரத்தில் முடிப்பதற்கு கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற்பட்ட விடயங்களை பேசுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

2. சபையில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டு அது தொடர்பாக கௌரவ உறுப்பினர்கள் உரையாற்றும் போது, அவ் உரைகள் யாவும் குறித்த பிரேரணை சம்பந்தமானதாகவே இருக்க வேண்டும். அதை விடுத்து அப்பிரேரணைக்கு சம்பந்தமற்ற விடயங்கள் பேசப்படுமாயின் அவை அக் கூட்டக் குறிப்பில் சேர்க்கப்பட மாட்டாதென்பதனையும் அறியத் தருகின்றேன். மேலும் எமது மாநகர எல்லைக்கும், எமது செயற்பாட்டிற்கும் அப்பாற்பட்ட விடயங்கள் தொடர்பாக பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு, அது குறித்த கௌரவ உறுப்பினரால் சபையில் முன்வைக்கப்படும் போது அது தொடர்பில் எவரும் உரையாற்றவோ அல்லது கருத்துத் தெரிவிக்கவோ முடியாது என்பதுடன், அது தொடர்பாக பேசப்படுமாயின் அது கூட்டக்குறிப்பில் இடம் பெற மாட்டாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

3. இச்சபை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதலாக எம்முடன் பயணித்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப் படுத்திய கௌரவ உறுப்பினர் திரு.மொகமட் உசனார் மொகமட் நிப்லார் அவர்கள் தனது உறுப்பினர் பதவியை முடிவுறுத்திக் கொண்டதன் காரணமாக அவரது இடத்திற்கு புதிய உறுப்பினராக திரு.அப்துள்காதர் முகம்மது லத்தீப் அவர்கள் மட்டக்களப்பு மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலகர் அவர்களால் 2271/27ம் இலக்க 15.03.2022ந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக நியமிக்கப்பட்ட வகையில், அவர் இன்று இந்த அமர்வில் எம்முடன் இணைந்துள்ளார் என்பதை சபையினர்க்கு அறியத் தருவதுடன், அவரை சபையினர் சார்பில் வரவேற்று வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- **சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக் குழுவின் சிபார்சுகள்.**

காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கிய 1947ம் ஆண்டின் மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 28ம் பிரிவுக்கு அமைவாக மட்டக்களப்பு மாநகரசபையின் நிதிக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு இவ்வுயரிய சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட பின்வரும் விடயங்களை மாநகர சபையின் கௌரவ முதல்வர் என்ற வகையில், தியாகராஜா சரவணபவன் ஆகிய நான் இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

**2022.04.29ம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்ற 63வது நிதிக் குழுக் கூட்டத்தில் நிதிக் குழுவின் 4/5 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்த நிலையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக,**

## 1. தற்காலிக தொழிலாளர் சேவைக் கால நீடிப்பு:-

சபையின் அனுமதியோடு தற்காலிக அடிப்படையில் பதில் தொழிலாளி நியமனத்தைப் பெற்று கடமையாற்றி வருகின்ற உத்தியோகத்தர்களில் கீழ் விபர ஊழியர்களின் சேவைக்காலம் அவர்களது பெயருக்கு நேராக குறிப்பிடப்பட்டுள்ள திகதியுடன் முடிவடைகின்ற நிலையில் அவர்களது சேவைக் காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கு நீடித்தல் தொடர்பில், "அவர்களது சேவைக் காலம் நீடித்து வழங்கப்படும் பட்சத்தில் அவர்கள் ஈடுபடுத்தப்படவுள்ள கடமை தொடர்பாக நிர்வாக தரப்பினரால் வழங்கப்படும் அறிக்கை மாநகர முதல்வரினால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே அத்திகதி முதலாக அவர்களுக்கான சேவை நீடிப்பு நிர்வாக தரப்பினரால் வழங்கப்படல் வேண்டும்" என்ற நிபந்தனையுடன் அவர்களது கோரிக்கைக்கு ஏற்பவும், சபையின் அவ்வப் போதான தேவை கருதியும் அவர்களது சேவைக் காலத்தையும் மேலும் 06 மாத காலத்திற்கு நீடிப்பு செய்து கொள்ளும் வகையில் **மொத்தம் 25 பேருக்கான** சேவைக் கால நீடிப்புக்கான **சபை அனுமதியினைப்** பெறும் பொருட்டு நிதிக் குழுவினால் 25வது நபராக குறிப்பிடப்பட்டுள்ள பதில் வேலைத் தொழிலாளிக்கு வழங்கப்பட்டுள்ள நிபந்தனையுடன் ஏகமனதான சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

| இல | ஊழியரின் பெயர் | நியமனத் | இறுதியாக வழங்கப்பட்டுள்ள | சேவை முடிவுறுத்தப்ப |
|---|---|---|---|---|

| | | திகதி | சேவைக் கால நீடிப்புத் திகதி | டவுள்ள திகதி |
|---|---|---|---|---|
| | **பதிலீட்டு சுகாதாரத் தொழிலாளி** | | | |
| 01 | திரு. தெய்வேந்திரன் மலர்வேந்தன் | 05.10.2015 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 02 | திரு. கருணாதிலக சுசந்த | 05.10.2015 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 03 | திரு.முத்துமுணியாண்டி வேல்முருகன் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 04 | திரு.சோமசுந்தரம் சுரேசன் | 05.10.2015 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 05 | திருமதி.புனிதாதேவி ஞானசேகரம் | 05.10.2015 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 06 | திரு.அன்ரனிதாஸ் விதுசன் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 07 | திரு.புஸ்பராஜ் நிவேகிதன் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 08 | திரு.முணியாண்டி ஹரிபிரசாந்த் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 09 | திரு.சுந்தரலிங்கம் டிலெக்சன் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 10 | திரு.நித்தியானந்தம் விஜயகுமார் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 11 | திரு.குணரெத்தினம் டினோசன் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 12 | திரு.பத்மநாதன் வரதன் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 13 | திரு.சாந்தகுமாரன் ரஜந்தன் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 14 | திரு.சக்திவேல் ஜோன் ஒஸ்ரின் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 15 | திரு.சுப்பிரமணியம் சிறிபவன் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 16 | திரு.கணபதிப்பிள்ளை சந்திரமோகன் | 21.03.2018 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 17 | திரு.யோகராஜா அனோஜன் | 05.04.2018 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 18 | திரு.மதனகேசரி திருச்செல்வம் | 05.04.2018 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 19 | திரு.சபாரெத்தினம் நகுலேஸ்வரன் | 05.04.2018 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 20 | திரு.கணேசபிள்ளை செந்தூரன் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 21 | திரு.கெங்காதரன் சுதாகரன் | 06.04.2017 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 22 | திரு.அருளம்பலம் அருள்ராஜா | 06.04.2017 | 15.12.2021 – 14.06.2022 | 15.06.2022 |
| 23 | செல்வி.சுந்தரலிங்கம் மோனிக்கா | 19.04.2018 | 15.12.2021 – 14.06.2022 | 15.06.2022 |
| | **பதிலீட்டு வேலைத் தொழிலாளி** | | | |
| 24 | திரு.மோகனதாஸ் இளங்கோ | 15.03.2015 | 07.12.2021 – 06.06.2022 | 07.06.2022 |
| 25 | திரு.இராமச்சந்திரன் சுதர்சன் (இவருக்கு" வேலைத் தொழிலாளி பதவிக்கான கடமை மட்டும் தான் வழுங்கப்படல் வேண்டும்" என்ற நிபந்தனையுடன் இவருக்கு மீள வேலை வழங்குதல்) | | | |

கௌரவ உறுப்பினர் திருமதி சசிகலா விஜயதேவா அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, கடந்த நிதிக் குழுவிற்கு நான் சமூகமளிக்கவில்லை. ஏற்கனவே கௌரவ உறுப்பினர்கள் பலர் அவருக்குரிய வேலையினை வழங்க வேண்டும் எனக் கதைத்திருந்தார்கள். குறித்த ஊழியர் தொடர்பாக பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன. எனவே நீங்கள் அவை தொடர்பான நடவடிக்கைகளை எடுத்ததற்கு பிறகு அவருக்குரிய வேலை வாய்ப்பினைக் கொடுக்கலாம் எனத் தெரிவித்திருந்தீர்கள். அதற்கமைய 38 பேருக்கும் அவரது கடிதங்கள் வழங்கப்பட்டு 38 கௌரவ உறுப்பினர்களின் சம்மதத்துடன் தான் அவருக்குரிய வேலை வாப்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கையில், தற்போது அவருக்குரிய விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதா? அவரது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது தனிப்பட்ட பழிவாங்கலால் இடைநிறுத்தப்பட்டாரா? என்பதை எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், இவ்விடயத்தில் ஆணையாளர் உரிய விசாரணையை மேற்கொண்டு அவருக்குரிய நியமனத்தினை வழுங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் பேசுகையில், அவருக்குரிய நியமனத்தினை முதலில் வழுங்கி விட்டு பின்னர் விசாரணைக்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும். ஏனெனில் ஏற்கனவே கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கூறியதற்கு அமைய தற்போது பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது எனத் தெரிவித்தார்.

கௌரவ பிரதி முதல்வர் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே! ஏற்கனவே அவரிடம் எழுத்து மூலமான அறிக்கை பெற்று விட்டு வேலை வழங்கலாம் என இந்த உயரிய சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. சென்ற அமர்விலே நிதிக் குழுவின் சிபார்சு இல்லாமல் அவருக்கு வேலை வழங்க முடியாது என்று தான் தெரிவிக்கப்பட்டது. தற்போது நிதிக்குழு அதற்கான சிபார்சினை வழங்கியிருக்கின்றது. எனவே ஒவ்வொரு அமர்விலும் ஒவ்வொரு விதமாகக் கதைத்து விட்டுச் செல்வது என்பது சாலச் சிறந்ததல்ல. இங்கு பழி வாங்கும் படலம் இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பதாகத் தான் நான் கருதுகின்றேன். ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது எங்கே செல்லும் என எனக்குத் தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே! இங்கே ஒரு ஊழியரையோ அல்லது உத்தியோகத்தரையோ அவர்களது தொழிலிலிருந்து நிறுத்துவதற்கு முற்பாடு அவரிடமிருந்து அறிக்கையினைப் பெற வேண்டும் என நான் பரிந்துரைக்கின்றேன். காரணம் ஏற்கனவே நிதிக் குழு மற்றும் சபை அனுமதி பெறப்பட்டுள்ளது. அவ்விடயத்திற்கு மீண்டும் ஓர் விசாரணை தேவைதானா? எனக் கேள்வி எழுப்பினார்

கௌரவ உறுப்பினர் திரு.புஸ்பராஜ் ரூபராஜ் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே! தற்போது ஒரு திருட்டு வேலையில் ஈடுபட்டவருக்கு தாங்கள் வேலை வழங்கியிருக்கலாம் என்றால் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளிக்கு ஏன் வேலையினை வழங்க முடியாது?. அவர் திருட்டில் ஈடுபட்டது அனைவருக்கும் தெரிந்த விடயம். அவருடைய அந்தச் செயற்பாட்டுக்கான CCTV காட்சிகள் சகலதும் இருக்கின்றது. அப்படியிருந்தும் உங்களது தற்துணிவின் பேரில் அவருக்கு வேலை வழங்கலாம் என்றால் அதேபோன்று இந்த சபையால் தீர்மானிக்கப்படும் விடயத்திற்கும் வழங்கலாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, அவர் அவருடைய சொந்த தேவைக்கு எடுத்து போகவில்லை. ஆணையாளர் என்று ஒரு ஆள் இங்கு இருந்தார். அந்த ஆணையாளரின் ஆலோசனைக்கு அமைவாகத் தான் அது நடை பெற்றிருக்கின்றது. இப்போது சொல்லுங்கள் அவருக்கு தண்டனை கொடுப்பது சரியா?. ஆணையாளருக்கு என்ன தண்டனை கொடுத்தீர்கள்?. அதாவது அந்த வாகனத்தினை எடுத்துப் போகச் சொன்ன ஆணையாளருக்கு என்ன தண்டனை கொடுத்தீர்கள்? எனவும் வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், நீங்கள் என்ன கதைக்கின்றீர்கள். நீங்கள் என்ன நடக்கிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். நிதிக்குழுவினால் சிபாரிசு செய்து இங்கு கொண்டு வந்திருக்கின்றோம். அதற்கான விசாரணை அறிக்கை கிடைத்த பிறகு தான் நீங்கள் கொடுக்க வேண்டும் என்று ஒருவர் முன்மொழிந்திருக்கின்றார். அது நியாயமான

கோரிக்கையாவும் இருக்கின்றது. ஆனால் நீங்கள் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் இந்த நிபந்தனையுடன் கொடுப்போம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, ஒருவர் தான் எதிர்த்து சொல்லியிருக்கின்றார். ஏனைய எல்லோருக்கும் வேலை கொடுக்கத் தான் விருப்பம். வாக்கெடுப்பிற்கு விட்டு வேலையை கொடுங்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இது சென்ற சபையிலே ஒரு தீர்மானமாக கொண்டு வரப்பட்டதாகும். அதாவது நிதிக் குழுவிலே தீர்மானம் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்திலே வழங்கப்படலாம் என்பதே சென்ற கூட்டத்திலே எடுக்கப்பட்ட தீர்மானம். அதற்கான தீர்மானத்தினை நிதிக்குழுவில் நிறைவேற்றுவதற்கு முன் அவர் ஊடாக இதற்கான கடிதம் ஏதும் கிடைக்கப் பெற்றதா? என நான் உங்களிடம் கேட்டிருந்தேன். அதன் போது கிடைக்கப் பெற்றது என்று பதில் வழங்கப்பட்டது. அந்தக் கடிதத்தின் பிரகாரம் தான் எங்களுக்குரிய அங்கீகாரத்தினை வழங்கியிருந்தோம். ஆகவே நிதிக் குழுவில் அதாவது அவருக்கு வழமையான சாரதி வேலையில்லாமல் சுகாதாரப் பகுதியூடாக அவருடைய வாழ்கையை கொண்டு செல்வதற்காக தொழிலை வழங்குவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டு விட்டது. எனவே வழங்குவது சரியென்று நினைக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நான் வேலை கொடுக்க வேண்டாம் எனச் சொல்லவில்லை. நீங்கள் எடுத்த தீர்மானம் வேலையை நிறுத்தி வைத்திருக்கின்றீர்கள்.அவர் என்ன குற்றம் செய்து இருக்கின்றார் என்பதை நிருபித்த பின்னர் தான் வேலை வழங்குவது என அத்தனை உறுப்பினர்களும் கேட்ட நேரம் நீங்கள் வாதிட்டீர்கள். நீங்கள் கொடுங்கள். ஆனால் அது நிரூபிக்கப்பட்ட பின்னர் உண்மை தானா? அவர் ஏற்றுக் கொண்டாரா? என்பது எங்களுக்கு தெரிய வேண்டும். சிலவேளை அவர் ஏற்றுக் கொள்ளாமலும், பிழை விடாமலும் உள்ள போது கூட நீங்கள் செய்து இருக்கலாம். நாங்கள் காணவில்லை. நீங்கள் தான் அதையும் கொண்டும் வருகின்றீர்கள், இதையும் கொண்டு வருகின்றீர்கள். அவர்கள் எல்லோரும் இரண்டு பகுதியாலும் பாதிக்கப்பட்டவர்கள். அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்பது தான் எனது தீர்மானம் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

சபையின் அனுமதியோடு தற்காலிக அடிப்படையில் பதில் தொழிலாளி நியமனத்தைப் பெற்று கடமையாற்றி வருகின்ற மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயருடைய ஊழியர்களின் சேவைக்காலம் முறையே 2022 யூன் மாதத்தில் முடிவடைகின்ற நிலையில் அவர்களது சேவைக் காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கு நீடித்தல் தொடர்பில், “அவர்களது சேவைக் காலம் நீடித்து வழங்கப்படும் பட்சத்தில் அவர்கள் ஈடுபடுத்தப்படவுள்ள கடமைகள் தொடர்பில் அவர்களுக்கான நேரடி மேற்பார்வையாளரின் சிபார்சுடன் நிர்வாக தரப்பினரால் வழங்கப்படும் அறிக்கையின் அடிப்படையில் அவர்கட்கான சேவைக் காலம் மாநகர முதல்வரினால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே அத்திகதி முதலாக அவர்கட்கான சேவை நீடிப்புக் கடிதம் நிர்வாக தரப்பினரால் வழங்கப்படல் வேண்டும்” என்ற நிபந்தனையுடன், மற்றும் மேல் அட்டவணையில் 25ஆவதாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பதில் வேலைத் தொழிலாளி திரு.இ.சுதர்சன் என்பவரது பெயருக்கு நேரே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையானது “அவர் சுகாதாரப் பிரிவில் பதில் தொழிலாளியாக கடமையாற்றும் வகையில் ஏதாவது ஓர் திரட்டு

நிலையத்தின் ஊடாக கடமை வழங்கப்படல் வேண்டும்" என மாற்றம் செய்யப்பட்டு உரிய நிதி மற்றும் நிர்வாக நடைமுறைகட்கும் உட்பட்டதாக மொத்தம் 25 பதில் தொழிலாளர்களின் சேவைக் காலத்தை மேலும் 06 மாத காலத்திற்கு நீடிப்பு செய்து கொள்வதற்கு பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. கந்தசாமி ரகுநாதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார்.**

## 2. <u>மாநகர சபையின் 2019ம் ஆண்டுக்கான கணக்காய்வுக் கட்டணத்தை செலுத்தல்.</u>

மாநகர சபையின் 2019ம் ஆண்டுக்கான கணக்காய்வினை மேற்கொண்டமைக்கான கணக்காய்வுக் கட்டணமாகிய ரூபா.174,000/-வை கணக்காய்வாளர் தலைமை அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம், பத்தரமுல்ல அவர்களுக்கு உரிய நிதி, நிர்வாக நடைமுறைக்கு உட்பட்டதாக செலுத்துவதற்கான சபையின் அனுமதியை பெறும் பொருட்டு நிதிக்குழுவினால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ முதல்வர் அவர்கள் இது மாநகர சபைக்கான கணக்காய்வுக் கட்டணமாகும். எனவே இதனை ஒருவர் முன் மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மேற்படி விபரத்துடனான கணக்காய்வுக் கட்டணமாகிய ரூபா.174,000/-வை கணக்காய்வாளர் தலைமை அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம், பத்தரமுல்ல அவர்களுக்கு உரிய நிதி, நிர்வாக நடைமுறைக்கு உட்பட்டதாக செலுத்துவதற்கு பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திருமதி. சசிகலா விஜயதேவா.**
**வழி மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.மயில்வாகனம் ரூபாகரன்.**

## 3. <u>மாநகர சபையின் பொதுச் சந்தையிலுள்ள ஆயுள் கால கடை உரிமையாளர்கள் உயிருடன் இல்லாத கடைகளை மாநகர சபை மீள பொறுப்பேற்று கேள்வி கோரி வழங்குவதற்கான அனுமதி.</u>

மாநகர சபையின் பொதுச்சந்தையில் காணப்படுகின்ற ஆயுள் குத்தகையில் வழங்கப்பட்டிருந்த பின்வரும் 12 கடைகளினதும் அவற்றிக்கு நேரே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அதன் உரிமையார்கள் தற்போது உயிருடன் இல்லாத காரணத்தால் அக்கடைகளை மாநகர சபை மீள பொறுப்பேற்பதற்கும், அக்கடைகளை பகிரங்கமாக கேள்வி கோரி மீள குத்தகைக்கு வழங்குவதற்குமான நடவடிக்கையை உரிய நிதி நிர்வாக ஏற்பாடுகள், விடயத்துடன் தொடர்புபட்ட சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் மற்றும் கேள்வி நடைமுறைகளுக்கும் உட்பட்டதாக முன்னெடுப்பதற்குமான சபையின் அனுமதியை பெறும் பொருட்டு நிதிக்குழுவினால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

| உரிமையாளர் உயிருடன் இல்லாத பொதுச் சந்தைக் கடைகளின் விபரம் | | |
|---|---|---|
| UDA கடை வரிசை | | |
| **இல** | **காலஞ் சென்ற உரிமையாளர் பெயர்** | **கடை விபரம்** |
| 1 | S.M.மாணிக்கவாசகர் (Owner Death) | No: 1A, UDA வரிசைக் கடை |
| 2 | R.அருளானந்தம் (Owner Death) | No: 7, UDA வரிசைக் கடை |

| | | |
|---|---|---|
| 3 | S.கெங்காதரன் (Owner Death) | No: 12, UDA வரிசைக் கடை |
| 4 | R.அருளானந்தம் (Owner Death) | No: 22, UDA வரிசைக் கடை |
| 5 | M.HA.கபூர் (Owner Death) | No: 28, UDA வரிசைக் கடை |
| 6 | P.கதிரவேற்பிள்ளை (Owner Death) | No: 29, UDA வரிசைக் கடை |
| **புதிய வாழைப்பழ கடை வரிசை** | | |
| **இல** | **காலஞ் சென்ற உரிமையாளர் பெயர்** | **கடை விபரம்** |
| 7 | Mrs.R.இமானுவேல் (Owner Death) | No:6, வாழைப்பழ வரிசைக் கடை |
| **மரக்கறி கடை வரிசை** | | |
| **இல** | **காலஞ் சென்ற உரிமையாளர் பெயர்** | **கடை விபரம்** |
| 8 | P.கதிரவேற்பிள்ளை (Owner Death) | No:8, மரக்கறி வரிசைக் கடை |
| 9 | P.ஞானப்பிரகாசம் (Owner Death) | No:13, மரக்கறி வரிசைக் கடை |
| **பலசரக்கு கடை வரிசை** | | |
| **இல** | **காலஞ் சென்ற உரிமையாளர் பெயர்** | **கடை விபரம்** |
| 10 | M.இராமநாதன் (Owner Death) | No:2, பலசரக்கு வரிசைக் கடை |
| **இல** | **காலஞ் சென்ற உரிமையாளர் பெயர்** | **கடை விபரம்** |
| 11 | K.M.A. முகைதீன் (Owner Death) | No:16, புதிய சந்தைக் கடை |
| **MULTY GOOD LINE SHOP** | | |
| **இல** | **காலஞ் சென்ற உரிமையாளர் பெயர்** | **கடை விபரம்** |
| 12 | M.முத்துக்குமார் (Owner Death) | No:3,பல்பொருள் அங்காடி வரிசைக் கடை |

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், மேலே குறிப்பிட்ட நபர்களிடமிருந்து கடைகளை மீளப் பெற்று உரிய குத்தகைக் கேள்வி கோரி புதியவர்களுக்கு வழங்குவதற்கான ஒரு அனுமதி கோரப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நல்லதொரு விடயம். மாநகர சபைக்கு வருமானத்தினை ஈட்டக்கூடிய விடயமாகக் காணப்படுகின்றது. பொதுச் சந்தையில் பல கடைகள் ஒருவருடைய பெயரில் உள்ளதுடன், பல கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கடைகளை உரியவர்கள் செய்யாமல் இருப்பதன் காரணமாக எமது மாநகர சபையினுடைய சொத்துக்களை அவர்கள் வாடகைக்கு கொடுக்கின்ற அளவிற்கு செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக ஒரு முதலாளிக்கு ஏழு கடைகள் இருக்கின்றது. அவர் மாநகரசபை எல்லைக்குள் பெரிய கடைகளைக் கட்டி வாடகைக்கு கொடுத்து விட்டு எமது மாநகர சபை சொத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். ஆனால் எங்கள் மாநகர சபைக்கு வருகின்ற வருவாய் ஒரு மூவாயிரம் ரூபாய் இருக்கும் என நினைக்கின்றேன். ஆனால் அவர் மாத வருவாயாக மாதமொன்றிக்கு ரூபா.25,000/-தை பெற்றுக் கொண்டு இருக்கின்றார். ஆகவே அப்படியான கடைகளை மீளப்பெற்று குத்தகைக்கு கொடுப்பதன் ஊடாக எமது மாநகர சபைக்குரிய வருவாயை ஈட்டிக் கொள்ளலாம் என நினைக்கின்றேன் எனக் கூறினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்து பேசுகையில், உண்மையில் இவ்விடயம் சம்பந்தமாக நாங்கள் ஆரம்பத்தில் தீர்மானம் எடுத்து அதனை நடைமுறைப் படுத்துவதற்கான அனுமதியினை வழங்கியிருந்தோம். எனினும் நிர்வாகத்தில் இருக்கின்ற சில தாமதங்களினாலும், மற்றும் வேறு வழியில் அவர்களை திருப்திப் படுத்திற மாதிரி, அதாவது நான் முகாமையாளரை வைத்து நடத்துகின்றேன் என வெளிப்படுத்துவதும் காரணமாகின்றது. அதற்கு நாங்கள் முகாமையாளராக இருப்பவர் ETF, EPF செலுத்தி இருக்க வேண்டும் என்று கூறியிருந்தோம். எனவே அவர்கள் இவ்வாறான சில விடயங்களை காட்டி தொடர்ச்சியாக கடைகளை தம்முடன் வைத்துச் செய்வதற்கு

எத்தனிக்கின்றனர். எனவே புதிதாக வந்த ஆணையாளரிடம் இந்த பொறுப்பினையும் கொடுக்கின்றோம். நாங்களறிய பெரிய முதலாளிமார் ஆறு, ஏழு கடைகளை வைத்துக் கொண்டு மிகக் குறுகிய வாடகையை மாநகர சபைக்கும், அவற்றை வெளியில் ரூபா.22,000/-தை கொடுக்கின்ற அளவிலே அங்கே செயற்பாடுகள் இருக்கின்றது. மேலும் இது தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. எனவே இது தொடர்பாக குறுகிய காலத்திற்குள் எமது ஆணையாளர் நடவடிக்கை எடுப்பார் என நினைக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இந்த ஆயுட் கால கடைகள் வழுங்கப்பட்ட நபர்களுக்கு அவர்களுடைய தகப்பனாரோ, சகோதரமோ காலஞ் சென்றிருந்தால் அவர்களுடைய குழந்தைகள், அவர்களுடைய உறவினர்கள் வழங்குவதற்குரிய முன்னேற்பாட்டை செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கையில்,

கௌரவ முதல்வர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகையில், தேவையெனின் அவர்களும் விண்ணப்பித்து எடுக்கலாம். நாம் குத்தகைக் கேள்வி கோரத் தான் போகின்றோம். அவ்வாறு கோரும் போது அவர்களும் விண்ணப்பித்து எடுக்கட்டும் என தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், இவ்வளவு காலமும் நடைமுறை ஏற்பாடு சாத்தியமாக இருந்தது. அதாவது சட்ட ஏற்பாட்டிற்கு அமைவாக இருந்ததா? அல்லது சட்ட ஏற்பாட்டிற்கு அப்பால் செய்யப்பட்டிருந்ததா? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலிறுத்துப் பேசுகையில், சட்ட ரீதியாக எந்த ஏற்பாடும் இல்லை. எந்த ஒப்பந்தந்திலும் அவ்வாறு ஒரு ஏற்பாடு இல்லை. ஆனால் இதற்கு முன்பிருந்த சபை சில கடைகளை 99 வருடங்களுக்கு குத்தகை வழங்கியிருந்தது. ஆனால் வழங்கும் போது அதற்கான ஆரம்பத் திகதி கொடுக்கப்படவில்லை, முடிவுத் திகதியும் கொடுக்கப்படவில்லை. இவ்வாறு தான் அக்கடைகள் வழங்கப்பட்டிருந்தது. அந்த நிபந்தனைகளை மீறுகின்ற சந்தர்ப்பங்களில் எங்களுக்கு அற்றை மீளப் பெறக் கூடியதாக இருந்தது. கடந்த காலத்தில் 20 கடைகளுக்கு மேல் மீளப் பெற்றிருக்கின்றோம். அவை ஆயுட் காலக் கடைகள். அவற்றை மீளப்பெற்று வேலையில்லாத இளைஞர்களுக்கு தொழில் வழங்கும் நோக்கில் அவர்களும் கேள்வி கோரும் போது விண்ணப்பித்து எடுக்கட்டும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, சட்ட ஏற்பாடு இல்லாத நிலையில் இவ்வளவு காலமும் நடைபெற அனுமதிக்கப்பட்டதா?அதாவது ஏழு வருடங்களின் பின் மக்கள் பிரதிநிதிகள் சபை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் தொடர்ச்சியாக இவ்வளவு காலமும் சட்ட ஏற்பாடுகளுக்கு அப்பால் இந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கின்றதா? எனவும் வினாவினார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, தாங்கள் சொன்ன விடயம் தான் பஸ்தரிப்பு நிலையத்திலுள்ள கடைகள் 99 வருட குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பதுமாகும். அதையும் உரிய நபர்கள் உப குத்தகைளுக்கு கொடுத்திருக்கின்றார்கள். எனவே அதையும் கவனத்திற் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்து பேசுகையில், தகவல் சரியான முறையில் கிடைத்தால் அந்த ஒப்பந்தமும் இரத்தாகும் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மாநகர சபையின் பொதுச்சந்தையில் காணப்படுகின்ற ஆயுள் குத்தகையில் வழங்கப்பட்டிருந்த பின்வரும் 12 கடைகளினதும் அவற்றிக்கு நேரே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அதன் உரிமையார்கள் தற்போது உயிருடன் இல்லாத காரணத்தால் அக்கடைகளை மாநகர சபை மீள பொறுப்பேற்பதற்கும், அக்கடைகளை பகிரங்கமாக கேள்வி கோரி மீள குத்தகைக்கு வழங்குவதற்குமான நடவடிக்கையை உரிய நிதி நிர்வாக ஏற்பாடுகள், விடயத்துடன் தொடர்புபட்ட சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் மற்றும் கேள்வி நடைமுறைகளுக்கும் உட்பட்டதாக முன்னெடுப்பதற்கு பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.சச்சிதானந்தம் கமலரூபன்.**

4. **<u>மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினதும், தரமுயர்த்தப்பட்ட நூலகங்களினதும் ஆளணிக்கமைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி.</u>**

மாநகர சபையின் தீயணைப்பு பிரிவில் காணப்படுகின்ற "தீயணைப்பாளர்" பதவி வெற்றிடத்திற்கு சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு (SOR) அமைவாக விண்ணப்பம் கோரி ஆட்சேர்ப்பதற்கு அல்லது அது சாத்தியப்படும் வரை 2018ம் ஆண்டும் அதன் பின்னருமாக மாநகர சபையில் வேலைப் பகுதி அல்லது சுகாதாரப் பகுதிகளில் நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வு பெற்றவர்களின் குடும்ப உறவுகளுக்கு உரிய தகமையுடன் பதில் தொழிலாளராக சிலரை உள்வாங்கி அவர்களை தீயணைப்பு பிரிவிலும், ஏனைய கடமைகளிலும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான அனுமதியை உரிய தலைமைகளிடமிருந்து பெற்று மேற்கொள்வதற்கும், அதேபோன்று எமது 3 நூலகங்கள் தரமுயர்த்தப்பட்டதன் வகையில் அங்கு அதற்கமைவான பிரிவுகளை நடைமுறைப் படுத்தும் வகையிலும், நூலக தரத்திற்கு அமைவான ஊழியர்களை உரிய தகமைகளுடன் விண்ணப்பம் கோரி நியமித்துக் கொள்வதற்கும் இதன் போது பதில் தொழிலாளர்களாக நூலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் உரிய தகமைகளைக் கொண்டிருப்பின் அவர்களையும் முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கிக் கொள்வதற்குமாக அனுமதியையும் உரிய தலைமைகளிடமிருந்து பெற்று நடைமுறைப் படுத்துவதற்கான சபையின் அனுமதியை பெறும் பொருட்டு நிதிக்குழுவினால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், இதில் சின்ன திருத்தம் ஒன்று உள்ளது. நிதிக் குழுவின் சிபார்சின் பிரகாரம் முதலில் உள்ளக ரீதியாக கோரப்பட்டு அதன் பிற்பாடு 2018ம் ஆண்டிற்கு பிற்பாடு ஓய்வூதியத்திற்கு சென்றவர்களின் பிள்ளைகளை உள்வாங்க வேண்டும் என்று திருத்தம் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், தீயணைப்பு பிரிவில் வெற்றிடமிருக்கின்றது. நூலகங்கள் தரமுயர்தப்பட்டுள்ளது. தரமுயர்த்தப்பட்ட நூலகங்கள் சரியாக இயங்கவில்லை என்றால் அதனை தொடர்ந்து கொண்டு செல்ல மாட்டார்கள். எனவே அதற்கு நாங்கள் ஆட்களைச் சேர்க்க வேண்டும். ஆட்களை நாங்கள் உள்வாங்கும் போது மாகாண சபையின் அனுமதிக்கமைய தான் செய்ய வேண்டும். நாங்கள் நேரடியாக செய்ய இயலாது. போட்டிப் பரீட்சையின் மூலம் தான் செய்ய வேண்டும். தற்காலிகமாக எடுப்பதற்கு முதலாம் கட்டமாக உள்ளக ரீதியாக விண்ணப்பங்களை கோரி இந்த வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களை நிரப்புவதென்றும், அதில் தகுதியானவர்கள்

இல்லாதவிடத்து 2018ஆம் ஆண்டிற்கு பிற்பாடு ஓய்வூதியத்திற்கு சென்ற தொழிலாளிகளின் அதாவது வேலைத் தொழிலாளி, சுகாதாரத் தொழிலாளி என்ற தரத்திலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றவர்களின் பிள்ளைகளுக்கு அல்லது அவர்களினால் சிபாரிசு செய்யப்படுகின்றவர்களுக்கும் அதில் சிலருக்கு பெண் பிள்ளைகளாக இருக்கும் பட்சத்தில் அவரது வாழ்க்கைத் துணைக்கு வழங்குவது எனவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகத் தெரித்தார்.

கௌரவ உறுப்பினர் செல்வி.தயாளகுமார் கௌரி அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இவ்விடயம் தொடர்பில் உள்ள ரீதியாக விண்ணப்பம் கோர வேண்டும் என கட்டாய சட்டம் இருக்கின்றதா? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்து பேசுகையில், சபையில் உள்ளக ரீதியாக இருக்கின்ற ஆட்களுக்கு இவ்வாறான பதவிகளை பெறுவதற்கு சந்தர்ப்பத்தினை கொடுக்க வேண்டும் என்பதனால் ஆகும்.

கௌரவ உறுப்பினர் செல்வி.தயாளகுமார் கௌரி அவர்கள் தொடர்ந்து பேசுகையில், அதில் ஒரு வீதத்தை அவ்வாறு கொடுக்கின்றது நல்லது எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகையில், ஆட்சேர்ப்புத் திட்டம் இல்லாமல் உள் வாங்கியதால் எங்களுக்கு கடந்த முறை தீயணைப்பாளர்களை நிரந்தரமாக்குவதில் பாரிய சவால் இருந்தது. அதனால் அவர்கள் நிபந்தனையின் அடிப்படையில் தான் நிரந்தரமாக்கப்பட்டார்கள். அவர்கள் குறித்த மூன்று வருடத்திற்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகமைகளை பூரணப் படுத்தப்பட வேண்டுமென்பது நிபந்தனையாகும். அதே மாதிரி அந்த பதவிகளுக்கு உள்வாங்கும் பொழுது அந்த ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு ஏற்ப நாங்கள் சரியான ஆட்களை எடுத்தோம் என்றால் அவர்களை நிரந்தரமாக்கும் போது உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இல்லாவிட்டால் நிரந்தரமாக்கும் போது அவர்களை நிறுத்தி விடுவார்கள். மாநகர சபைக்குள் அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்படும் தகைமையில் ஆட்கள் இல்லை எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் செல்வி.தயாளகுமார் கௌரி அவர்கள் தொடர்ந்து பேசுகையில், காலம் காலமாய் பரம்பரை பரம்பரையாய் இதற்குள் சுற்றிக் கொண்டிருக்கும் பெண்கள் இருக்கிறார்கள். சில விடயங்கள் உதாரணமாக, பொறியியலாளர் பிரிவில் வேலை நடைபெறவில்லை என்று நீங்கள் கூறியிருந்தீர்கள். ஒவ்வொரு மாதமும் கதைக்கின்றோம். அதாவது ஒவ்வொரு மாதமும் நடைமுறைப்படுத்த போகின்றோம் என்று கதைக்கின்றோம். புதிய ஆணையாளர் வந்திருக்கின்றார் இரண்டு, மூன்று மாதங்களில் சபை கலைந்து விடும் என்றால் நாங்கள் ஒரு வேலையும் செய்யப் போறதில்லை. அதனால் இவ்விடயத்தினை கொஞ்சம் ஆழமாக ஆராய்ந்து பார்த்து நடைமுறைப்படுத்தினால் நல்லது. உண்மையில் மாநகர சபைக்குள் இருக்கும் ஒரு குறிப்பிட்ட ஆட்கள் மட்டும் பலன்களை அனுபவித்துக் கொண்டு போனால் வெளியிலிருக்கின்ற ஆட்களுக்கும் பெண்பிள்ளைகளும், ஆண் பிள்ளைகளும் இருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் குறுக்கிட்டு பேசுகையில், முதலாவதாக உள்ளார்ந்த ரீதியாக விண்ணப்பம் கோருவோம், அடுத்தாக எங்களிடமிருந்து ஓய்வூபெற்றவர்களின் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பம் கோருவோம்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், உள்ளார்ந்த ரீதியாக கோரும் போது அவர்கள் ஏற்கனவே இங்கு வேலை செய்கின்றார்கள் தானே? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், அவர்கள் தற்போது பதில் தொழிலாளிகளாக இருக்கின்றார்கள். ஆனால் அவர்களை தீயணைப்பாளராக கொண்டு செல்வதற்கு சந்தர்ப்பம் இருக்கும் என்றால் அதாவது தகமையிருக்கும் என்றால் அவர் தீயணைப்பாளர் ஆக வருவார். நூலக சேவைக்கான தகமையிருக்கும் என்றால் அவர் நூலக சேவையாளராக வருவார். இல்லாவிட்டால் அவர்கள் தகமையிருந்தும் பதில் தொழிலாளியாக தான் தொடர்ந்து இருக்க வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் பேசுகையில், மாநகர சபையில் உள்ள ஊழியர்கள் பலர் தொண்டர் அடிப்படையில் தீயணைப்பு வேலைகளில் பணியாற்றி வருகின்றார்கள். அவர்களையும் இணைத்துக் கொள்ளும் வகையிலேயே உள்ளக ரீதியான இணைப்பு விடயம் இதில் உள்வாங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் செல்வி.தயாளகுமார் கௌரி அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கூறிய விடயம் சரியாக இருந்தாலும் தெரிவு என்பது முழுமையாக அலுவலகத்திற்கு உள்ளேயே இடம் பெற்றால் அது ஒரு தவறான நடைமுறையாகப் போய் விடும். இந்த நாட்டைப் போலவே எமது மாநகர சபையும் செயற்பட முடியாத நிலையும் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் பேசுகையில், குறித்த நியமனங்கள் எந்தவித பாரபட்சமோ, சலுகைகளோ இன்றி முறையான விதத்தில் நடைபெற வேண்டும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.பேரின்பசாமி சுரேஸ்குமார் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, தங்களது முன்மொழிவை வரவேற்கின்றேன். ஏற்கனவே இங்கு தற்காலிக ஊழியர்களாக இருக்கின்றவர்களையும் நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், நீங்களும் இதே நாட்டில் தானே இருக்கின்றீர்கள். நிரந்தரமாக்குவது என்பது மாநகர சபையின் முடிவு அல்ல. இதனை செய்வது மத்திய அரசும், மாகாண சபையும் தான். ஆனால் இந்த அரசிடம் நிரந்தர நியமனம் வழங்கக் கூடிய வகையில் எந்த நிதி வளமும் இல்லை. எங்களது சபை நிதியை தருகின்றோம் நிரந்தரமாக்குங்கள் என நாங்கள் கூறியும் எந்த முன்னேற்றமும் இல்லை. மத்திய அரசு மற்றும் மாகாண சபைக்கு பொறுப்பான விடயத்தினை இந்தச் சபையில் பேசி எந்தப் பயனுமில்லை எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் செல்வி.தயாளகுமார் கௌரி அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, இங்கு ஒரு சிறு விடயத்தினை நான் குறிப்பிட வேண்டும். வட்டார ரீதியாக மின் குமிழ்களைப் பொருத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், மின்சார ஊழியர்கள் தன்னிச்சையாகவே முடிவெடுத்து செயற்படுகின்றார்களா? என சந்தேகம் எழுவதாகத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், அந்த உத்தியோகத்தர் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவரை அப் பதவியிலிருந்து மாற்றுமாறு சபையினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதை மிக விரைவில் ஆணையாளர் நடைமுறைப்படுத்துவார் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் செல்வி.தயாளகுமார் கௌரி அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, தற்போது பேசிக் கொண்டிருக்கும் விடயம் தொடர்பாக, ஏற்கனவே சபைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் வினைத்திறனற்ற ஊழியர்கள் தொடர்பில் இங்கு பேசப்பட்டது. எனவே உள்ளக ரீதியாக நியமனங்களை வழுங்கும் போது வினைத்திறன் அற்றவர்களுக்கு மாத்திரம் தான் இந்த நியமனங்களையும் வழங்க வேண்டி வரும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, எமது 9ம் வட்டாரத்தில் மின் குமிழ்கள் பொருத்தப்படுகின்றன. ஆனால் அவ்வட்டாரத்தினை சேர்ந்த எமக்கு அது பற்றித் தெரியாது எனவும் கூறினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இது தொடர்பில் கருத்துக்கள் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மாநகர சபையின் தீயணைப்பு பிரிவில் காணப்படுகின்ற "தீயணைப்பாளர்" பதவி வெற்றிடத்திற்கு அதற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாக விண்ணப்பம் கோரி ஆட்சேர்ப்பதற்கு செய்தல் அல்லது அது சாத்தியப்படும் வரை உள்ளார்ந்த ரீதியாக உரிய தகுதிகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரி அல்லது 2018ம் ஆண்டும் அதன் பின்னருமாக மாநகர சபையில் வேலைப் பகுதி அல்லது சுகாதாரப் பகுதிகளில் நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வு பெற்றவர்களின் குடும்ப வாரிசுகள் அல்லது பெண் வாரிசுகளாயின் அவரது துணைவர் என்போரில் (குடும்பத்திற்கு ஒருவர்) உரிய தகமையுடன் உள்ளவர்களை பதில் தொழிலாளராக உள்வாங்கி அவர்களை தீயணைப்பு பிரிவிலும், ஏனைய கடமைகளிலும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான அனுமதியை உரிய தலைமைகளிடமிருந்து பெற்று மேற்கொள்வதற்கும், அதேபோன்று எமது 3 நூலகங்கள் தரமுயர்த்தப்பட்டதன் காரணமாக அங்கு அதற்கமைவான பிரிவுகளை நடைமுறைப் படுத்தும் வகையிலும், அவ் நூலக தரத்திற்கு உரித்தான ஆளணிக்கான வெற்றிடங்களை அதற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாக உரிய தகமைகளுடன் விண்ணப்பம் கோரி நியமித்துக் கொள்வதற்கும் இதன் போது பதில் தொழிலாளர்களாக நூலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் உரிய தகமைகளைக் கொண்டிருப்பின் அவர்களையும் முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கிக் கொள்வதற்குமாக அனுமதியையும் உரிய தலைமைகளிடமிருந்து பெற்று நடைமுறைப் படுத்துவதற்கும் பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. தம்பிராஜா இராஜேந்திரன்.**

## 5. MCB–91 JCB Vaccum Booster திருத்தம்.

குறித்த வாகன திருத்தத்திற்காக Avorsment Engineering (pvt) Ltd இனரால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்த மதிப்பீடு ரூபா.188,927/06 பரிசீலிக்கப்பட்டு மதிப்பீட்டிற்கு அமைவாக திருத்த வேலையை அவர்களிடம் பெறுகை நடைமுறைக்குட்பட்டு வழங்கி செய்து கொள்வதற்கும், அதற்கான குறித்த செலவுத் தொகையினை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டு கொடுத்துத் தீர்ப்பதற்குமான சபையின் அனுமதியை பெறும் பொருட்டு நிதிக்குழுவினால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டு இவ்வுயரிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கௌரவ முதல்வர் அவர்கள் இது சபை வாகன திருத்தமாகும். எனவே இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மேற்படி வாகன திருத்த மதிப்பீடு ரூபா.188,927/06 பரிசீலிக்கப்பட்டு மதிப்பீட்டிற்கு அமைவாக குறித்த வாகனத்திற்கான திருத்த வேலையை அவர்களிடம் பெறுகை நடைமுறைக்குட்பட்டு வழங்கி செய்து கொள்வதற்கும், அதற்கான மதிப்பீட்டிற்கு உட்பட்ட செலவுத் தொகையினை உரிய நிதி நிர்வாக நடைமுறைக்குட்பட்டு அவர்களுக்கு கொடுத்துத் தீர்ப்பதற்கும் பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மாசிலாமணி தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மயில்வாகனம் நிஸ்கானந்தராஜா.**

- **கௌரவ முதல்வரின் முன்மொழிவுகள்.**

1) இ திரு.ஜே.அன்டனிராஜா, 2A, 2ம்குறுக்கு, மாமாங்கம், மட்டக்களப்பு என்பவர் மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் சந்தை மற்றும் வியாபார ஸ்தலங்கள் அமைந்துள்ள இடங்களிலும், சுற்றுலா ஸ்தலங்களிலும் கட்டுப்பாடான ஒலி அலைகளுடன் “ வாவிக்குரல்” என்ற பெயரில் ஒலிபரப்பு சேவை ஒன்றினை நடாத்துவதற்கான அனுமதியைக் கோரி சமர்ப்பித்தள்ள கடிதம் தொடர்பில், அதற்கான தீர்மானம் ஒன்றினை மேற்கொள்வதற்கான சபை அனுமதியினைக் கோரி கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்படும் முன்மொழிவு.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், மாநகர எல்லைக்குள் வாவிக்குரல் என்னும் பெயரில் ஒலிபரப்பு சேவை ஒன்றினை நடாத்துவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்துக்கள் ஏதும் இல்லாதவிடத்து இதனை ஒருவர் முன் மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மேற்படி விடயமாக கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட முன்மொழிவானது பரிசீலிக்கப்பட்டு குறித்த விடயத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்களின் அனுமதியை பெற்று சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதனை உரிய சட்ட ஏற்பாடுகள், சுற்றறிக்கைகளின் வலியுறுத்தல்கள் என்பவற்றுக்கு அமைவாக மாநகர இடப்பரப்பில் நடைமுறைப்படுத்த பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. தம்பிராஜா இராஜேந்திரன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**

2) புளியந்தீவு யாட் வீதிக்கு “புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வீதி” என பெயரிடலும், புலவர்மணி நினைவுப் பூங்காவினை மாநகர சபை பொறுப்பேற்று பராமரித்தல் தொடர்பாக இலக்கிய கலாநிதி புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றத்தின் செயலாளர்

அவர்களால் எழுதப்பட்ட 05.04.2022ந் திகதியிடப்பட்ட கடிதம் தொடர்பில் சபை அனுமதியினைக் கோரி கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்படும் முன்மொழிவு.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இது முன்னைய சபையிலேயே மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஆகும். இதனை நாம் சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தவும் குறித்த பூங்காவை பொறுப்பேற்று பராமரிப்பதற்குமான ஓர் தீர்மானத்தையே மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்கள் பேசுகையில், காலஞ்சென்ற கௌரவ உறுப்பினர் திரு.வே.தவராஜா அவர்களால் இந்த சபைக்கு கொண்டு வரப்பட்ட சில விடயங்களுக்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த சபை முடிந்த பின்னராவது அதனை நடைமுறைப்படுத்துவீர்களா? என கேள்வி எழுப்பினார். அதாவது அலுவலக முன்புறமாக இருந்து தூக்கிச் செல்லப்பட்ட உழவு இயந்திரத்தை மீள அவ்விடத்தில் வைத்தல் மற்றும் சபையை பொறுப்பேற்ற மக்கள் பிரதிநிதிகள் 38 பேரின் பெயர்களும் பொறிக்கப்பட்ட படிகக் கல்லினை பதித்தல் என்பனவாகும். எனவே இவை அவரது நீண்ட கால கோரிக்கையாக இருப்பதனால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், நாம் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத தீர்மானங்களை பட்டியலிட்டு ஆணையாளரிடம் வழங்கியுள்ளோம். அவர் அவற்றை பார்வையிட்டு நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார். அதேவேளை குறித்த உழவு இயந்திரத்தை முன்னைய இடத்தில் வைக்காது அதனை ஒரு பக்கமாக கண்ணாடியால் அடைப்பு ஒன்றினை ஏற்படுத்தி அதனுள் அழகு படுத்தி வைப்பதற்கான ஓர் யோசனையையும் தெரிவித்திருந்தார். அது ஒரு நல்ல முன்மொழிவாகவும் இருந்தது எனக் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்கள் மீண்டும் பேசுகையில், நகரிலுள்ள பெயர்ப் பலகைகளில் எல்லாம் மூன்று மொழிகளிலும் இருத்தல் வேண்டும் எனவும் அதில் முதல் மொழியாக தமிழ் மொழி இருக்க வேண்டும் எனவும் கேட்டிருந்தார். எனவே அதற்கான நடவடிக்கைகளையும் எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இதனை ஒருவர் முன் மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

மேற்படி விடயமாக கௌரவ முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட முன்மொழிவானது பரிசீலிக்கப்பட்ட போது, குறித்த யாட் வீதிக்கு "புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வீதி" எனப் பெயரிடப்பட்டு அதற்கு கடந்த சபையினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தமையும் கவனத்தில் கொள்ளப்பட்டு அதற்கு அமைவாகவும் குறித்த யாட் வீதியின் பெயரை "புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வீதி" என உரிய சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக பதிவு செய்து கொள்வதற்கும், அதற்கான பெயர் பலகையை தயாரித்து அவ்வீதியில் காட்சிப்படுத்துவதற்கும் மற்றும் அவர்களது கோரிக்கைக்கு அமைவாக வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்பாகவுள்ள புலவர்மணி நினைவுப் பூங்காவையும் மாநகர சபை உரிய நிர்வாக நடைமுறைகட்கு உட்பட்டு பொறுப்பேற்று அதனை அழகுபடுத்தி ஒலியூட்டி பராமரிப்பதற்கும் பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் ஏற்று அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.சச்சிதானந்தம் கமலரூபன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.சீனித்தம்பி ஜெயந்திரகுமார்.**

3) கல்லடி பழைய கல்முனை வீதியில் உள்ள வக்கர்மாவடி வீதிக்கும் போக்கடி வீதிக்கும் இடையிலுள்ள வீதிக்கு “தங்கரெத்தினம் வீதி” என பெயரிடல் விடயம் தொடர்பாக அவ்வீதியில் வதிகின்ற பொதுமக்களால் கையொப்பமிட்டு அவ்வீதியில் நீண்ட காலமாக வாழ்ந்த தங்கரெத்தினம் என்பவரின் பெயரை அவ்வீதிக்கு சூட்டுமாறு கோரி எழுதப்பட்ட 01.12.2021ந் திகதியிடப்பட்ட கடிதம் சபையில் கௌரவ முதல்வர் அவர்களால் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், குறித்த வீதியிலுள்ள 6 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கையொப்பமிட்டு அவ்வீதியில் நீண்ட காலமாக வசித்த ஒருவரின் பெயரை வீதிக்கு வைப்பதற்கு கோரியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

கௌரவ பிரதி முதல்வர் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே! நீண்ட காலம் வாழ்ந்தவர்கள் என்றால் அனைவரும் நீண்ட காலம் வாழ்ந்தவர்கள் தான். அவ் வீதியில் வசிக்கும் 6 குடும்பங்களுடன் அப்பிரதேசத்தில் உள்ள சமூகமட்ட அமைப்புகளினதும், ஆலயங்கள், சங்கங்கள் அனைத்தினதும் சிபார்சினையும் பெற்று விட்டு பெயர் சூட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே! அதே போல் தற்போது குறிப்பிட்ட யாட் வீதி, புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை வீதியாக பெயர் மாற்றம் செய்ய சமூக மட்ட அமைப்புகளின் கடிதங்கள் பெறப்பட்டதா? எனெனில் அங்கு வாழும் பெரும்பாலான மக்களின் விருப்பம் பெறப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், குறித்த யாட் வீதியில் உள்ள புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை பூங்கா அமைத்தல் மற்றும் அந்த வீதியின் பெயர் மாற்றம் என்பன செய்யப்பட வேண்டும் என முன்னைய சபையின் தீர்மானம் நிறைவேற்றப்ட்டுள்ளது. பூங்கா அமைக்கப்பட்டாலும், வீதியின் பெயர் மாற்றப்படவில்லை. அதன் காரணமாகவே அதனை செய்து தருமாறு மீள வலியுறுத்தியுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, இங்கே நீங்கள் உங்களது முன்மொழிவு என்று பல விடயங்களை கொண்டு வருகின்றீர்கள். அது குறித்து முன்கூட்டியே எமக்கு தெரியப்படுத்தினால் தான் கௌரவ உறுப்பினர்களாகிய நாங்கள் இங்கு தகவல்களுடன் வருவதற்கு உதவியாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.பேரின்பசாமி சுரேஸ்குமார் அவர்கள் பேசுகையில், முதல்வர் அவர்களே! அது முன்னைய சபையின் தீர்மானம். எமது 12ம் வட்டாரத்தில் உள்ள தோமஸ் அன்டனி வீதியின் பெயர் பலகையும் தற்போது இல்லாமல் போயுள்ளது. அதனையும் மீண்டும் பொருத்தித் தர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் சிவராசா சிவராஜ் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே! நேற்றைய தினம் மட்டக்களப்பின் பொக்கிசம் மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள் அமரத்துவமடைந்திருந்தார். அவருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றோம். பல அபிவிருத்தி பணிகளை செய்துள்ளீர்கள். அதேபோல் சபைக்கு என மின் பிறப்பாக்கி ஒன்றையும் கொள்வனவு செய்ய வேண்டும். அத்துடன் சிறுவர்

பூங்காக்களில் சிறுவர்கள் விளையாட முடியாத வகையில், விளையாட்டு உபகரணங்கள் சேதமடைந்துள்ளன. அதனையும் திருத்தம் செய்ய வேண்டும். அதே போல் மீனிசைப் பூங்காவில் உள்ள மீன் உடைந்துள்ளது. அதனையும் நீங்கள் திருத்தம் செய்ய வேண்டும். சிலவேளைகளில் எனது கடைசி சபை அமர்வு இதுவாக இருக்கும். ஏனெனில் வர்த்தமானி அறிவித்தல் இவ்வார இறுதிக்குள் வெளி வரும். எனவே கௌரவ மாநகர முதல்வர், பிரதி முதல்வர் உட்பட கௌரவ உறுப்பினர்களின் மனதினை பாதிக்கும் வகையில் நான் நடந்திருந்தால் அதற்காக மன்னிப்பினைக் கோருகின்றேன் எனத் தெரிவித்தார்.

குறித்த ஒரு வீதிக்கு பெயர் வைத்தல் தொடர்பில் முறையான நடைமுறை பின்பற்றப்படல் வேண்டும் என்பது தொடர்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதுடன், இங்கு தனிப்பட்ட ஒரு நபரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதால் இது தொடர்பில் அப்பகுதியில் உள்ள அமைப்புக்கள், ஆலயங்கள் என்பவற்றின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை பெற்றுக் கொண்ட பின் இதற்கான தீர்மானத்தை மேற்கொள்வதென பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன்மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.தம்பிராஜா இராஜேந்திரன்.**

## ➢ பாதீட்டு வேலை மாற்றம்.

கௌரவ பிரதி முதல்வர் திரு.கந்தசாமி சத்தியசீலன் அவர்களால் 2021 பாதீட்டில் வட்டாரம் 4ல் முன்மொழியப்பட்டிருந்த வடிகான் அமைப்பு வேலை, சின்ன ஊறணி மயான சுற்றுமதில் அமைப்பு வேலை என்பவற்றை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கட்டுமான மூலப் பொருள் தட்டுப்பாடு, விலை ஏற்றம் காரணமாக செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதன் காரணமாக அவற்றை இரத்து செய்து அவற்றுக்கு பதிலாக அவசியம் அவசரம் கருதி பின்வரும் வேலைத் திட்டங்களை செய்து தருமாறு கோரப்பட்டமையானது சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

i. சின்ன ஊறணி புதிய எல்லை வீதி 4ம் குறுக்கு தாரிடல்.
ii. செழியன் வீதி 1ம் குறுக்கு தாரிடல் - மிகுதி வேலை.
iii. மாதர் சங்க இணைப்பு வீதி தாரிடல்.

மேற்படி கோரிக்கைக்கமைவாக, 2021 பாதீட்டில் வட்டாரம் 4ல் முன்மொழியப்பட்டிருந்த வடிகான் அமைப்பு வேலை, சின்ன ஊறணி மயான சுற்றுமதில் அமைப்பு வேலை என்பவற்றை இரத்து செய்து அவற்றுக்கு பதிலாக அவசியம் அவசரம் கருதி மேலே முன்மொழியப்பட்டுள்ள 3 வேலைத் திட்டங்களையும் உள்வாங்கி அவற்றை உரிய நிதி நிர்வாக நடைமுறைகட்கு உட்பட்டும் மற்றும் குறித்த வட்டாரத்தின் நிதி ஒதுக்கீட்டினை விஞ்சாத வகையிலும் நடைமுறைப்படுத்துவதற்கு பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. தம்பிராஜா இராஜேந்திரன்.**

கௌரவ உறுப்பினரும் வேலைக் குழுவின் தலைவருமாகிய திரு.இராசலிங்கம் அசோக் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, மிக முக்கியாமான விடயம். நாங்கள் மதிப்பீடுகளை கேட்டால் தருகிறார்கள் இல்லை. அதனை பல தடவைகள் கேட்டுச் சென்றும் அசமந்தமாகவே இருக்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், பொறியியலாளர் பிரிவில் பல கால தாமதங்கள் நிலவுகின்றன. பல அபிவிருத்தித் திட்டங்களுக்கான பணம் திரும்பிச் செல்லவுள்ளது. அரசாங்கத்திடம் பணம் இல்லை. ஆனால் நாங்கள் அதற்கான நிதியினை தேடிக் கொண்டு வந்தாலும் அதனை நடைமுறைப் படுத்துவதில்லை. தற்போது உலக வங்கியின் நிதியும் திரும்பிச் செல்லவுள்ளது. இது தொடர்பாக ஆணையாளருடன் ஓர் கலந்துரையாடலினை ஒழுங்கு செய்வோம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே! நான் அடுத்த சபைக்கு நிர்வாக தரப்பில் உள்ள எந்த உத்தியோகத்தர் தனது பங்களிப்பினை செய்கிறார் இல்லை என்பதை பிறிஸ்டல் போட்டில் எழுதிக் கொண்டு வருவேன் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, இங்கே மூன்று தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உள்ளனர். மூன்று தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மூன்று பகுதிகளாக பிரித்து வேலை செய்கின்றார்கள். உத்தேச மதிப்பீடு வருவதில்லை என்பது ஒரு சிக்கலான விடயம். அதைப்பற்றி தொடர்ந்து கதைக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. ஆகவே இந்த மூன்று தொழில்நுட்ப உத்தியோகத்தர்களில் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரை 20 வட்டாரத்திற்கும் உரிய உத்தேச மதிப்பீடு தயாரிப்பதற்கு என நியமித்தால் என்ன? என்பதே என்னுடைய ஒரு கேள்வியாகும் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளிக்கையில், நாங்கள் புதிதாக வந்த ஆணையாளரிடம் இந்த விடயத்தையும் கொடுப்போம். அடுத்த மாதத்திற்கிடையில் மாற்றத்தை எதிர் பார்ப்போம் எனவும் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன் அவர்கள் பேசுகையில், சபையில் ஒரு விடயத்தை பகிரங்கமாக சொல்லிக் கொள்ககின்றேன். வார மாதம் சபை கலைக்கப்படா விட்டால் மக்களுக்கான செயற்பாட்டினை தடை செய்கின்றவர்களின் பெயரை பதாதையாக எழுதிக் கொண்டு வந்து மக்களுக்கு இங்கு காட்சிப் படுத்துவேன். இதற்கு ஒத்துழைக்க யார் வரா விட்டாலும் சரி, நான் தனியாகவாவது காட்சிப்படுத்துவேன் எனக் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திருமதி. சசிகலா விஜயதேவா அவர்கள் கருத்து தெரிவிக்கையில், நாங்கள் பொறியியலாளரின் பிரச்சனையை தான் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். அதற்கான மாற்று வழியை பார்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலிறுத்துப் பேசுகையில், நாங்கள் இந்த விடயங்களை இந்த ஆணையாளருக்கு கொடுகின்றோம். குறுகிய காலத்திற்குள் பொறியியலாளர் சரியாக வேலை செய்யவில்லை என்றால். பொறியியலாரை அனுப்பி போட்டு நாங்கள் மாநகர சபை நிதியில் பொறியிலாளர் ஒருவரை நியமிப்போம். ஓய்வு பெற்ற ஒருவரை நியமித்து வேலை செய்வோம். அதற்குரிய நிதியை மாநகர சபை வழங்கட்டும். அவருக்குரிய வளங்களை நிறுத்தி விடுவோம். அவர் இடமாற்றம் எடுத்துக் கொண்டு போகட்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், எனது வட்டாரத்திலே புதிதாக சந்தை அமைப்பதற்கு கேள்வி கோரப்பட்டிருந்தது. அதற்காக ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டும் இதுவரைக்கும் அந்த வேலை தொடங்கப் படவில்லை. கடந்த இரண்டு வாரமாக பொறியியலாளருடன் தொடர்பு கொண்டு இது ஏன் தொடங்கப்பட வில்லை என்று கேட்ட போது, அவர் தனக்குத் தெரியாது என்று கூறுகின்றார். தற்போது கடிதம் போட வேண்டும் என்று சொல்கின்றார். கடிதம் போடப்பட்டதா? என்றால் இதுவரை கடிதம் அனுப்பப்படவில்லை. ஒரு கேள்வி கோரப்பட்டு அதன் மூலம் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டால் ஒரு வாரத்தில் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டும். சித்திரை மாதம் 10ந் திகதி கேள்வி கோரப்பட்டு ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவரும் வந்து இடம் பார்த்து விட்டு போயிருந்தார். இது வரைக்கும் வேலை தொடங்க வில்லை. அதே போன்று கடந்த 2020ம் ஆண்டு பத்தாம் மாதம் நடைபெற்ற பொது அமர்விலே முனை வீதியில் உள்ள பூங்காவில் உள்ள விளையாட்ட உபகரணங்களை கொக்குவில் பிரதேசத்திற்கு மாற்றம் செய்வது என அனேகமாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுவரைக்கும் இத்தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. மேலும் இது சம்பந்தமாக ஞாபகமூட்டல் கடிதம் ஒன்றையும் வழங்கியிருந்தேன். அனால் அந்தக் கடிதம் எங்கு போய் சேர்ந்தது என்றும் தெரியவில்லை. எமக்கு உண்மையாகவே வினைத்திறன் கொண்ட ஆணையாளர் தற்போது வந்திருக்கின்றார். அவர் இவற்றை திறம்படச் செய்வார். ஓர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பல வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கௌரவ முதல்வர் கூட நான் கடிதம் கொடுத்ததிற்கு பிறகு குறித்த அதிகாரியோடு கதைத்து உடனடியாக சிறுவர் விளையாட்டிடத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று கூறினார். ஆயால் இது வரைக்கும் ஒரு மாதம் தாண்டி விட்டது. சிறுவர் பூங்கா களற்றப்படவுமில்லை, மாற்றப்படவுமில்லை எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நான் கூறியது போன்று 90 நாள் வேலைத்திட்டத்தினை போடுங்கள். பிரதி முதல்வர் அவர்களை அத்திட்டத்திற்கு பொறுப்பாக போடுங்கள். அவருடைய கண்காணிப்பில் 90 நாள் வேலைத்திட்டத்தினை நிறைவேற்றுவோம். வெறுமனே பேசிக் கொண்டே போகின்றோம். ஒரு வேலைத் திட்டமில்லை. மதிப்பிற்குரிய ஆணையாளர் அவர்களை இந்த 90 நாள் வேலைத் திட்டத்திற்கான உங்களுடைய பங்களிப்பையும் தாருங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

- **நாவற்குடா, விவேகானந்தபுரத்தில் விவேகானந்தர் பாலர் பாடசாலையும் பூங்கா என்பன அமைந்துள்ள காணியை இராமகிருஸ்ணமிசனுக்கு நீண்ட காலக் குத்தகையில் வழங்குவதற்கான மாநகர சபையின் ஒத்திசைவு கோரல்.**

நாவற்குடா விவோகானந்தபுரத்தில் உள்ள மாநகர சபைக்குச் சொந்தமான குறித்த காணியில் இராமகிருஸ்ண மிஷன் மூலமே இராமகிருஸ்ணர் பாலர் பாடசாலையும் சிறுவர் பூங்காவும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் அவை அமைந்துள்ள காணியினை இராமகிருஸ்ணமிஷன் நீண்ட கால குத்தகையில் வழங்குமாறு மண்முனை வடக்கு பிரதேச செயலாளருக்கு கோரிக்கை விடுத்துள்ள நிலையில் பிரதேச செயலாளரினால் அதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு முன்னர் மாநகர சபையின் ஒத்திசைவினை பெற்றுத் தருமாறு அவர்களிடம் கோரப்பட்ட வகையில் அவர்களால் எழுதப்பட்ட 26.04.2022ந் திகதியிடப்பட்ட கடிதம் சபையில் கௌரவ முதல்வர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், குறித்த காணியில் பல வருடங்களுக்கு முன்பே இராமகிருஸ்ணமிஷன் பாலர் பாடசாலையும், சிறுவர் பூங்காவும் அமைத்துக்

கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் இராமகிருஸ்ணமிஷன் அந்தக் காணியை அவர்களது பாராமரிப்பிற்காக நீண்ட கால குததகையில் வழுங்குமாறு பிரதேச செயலாளரை கோருகின்றனர் எனத் தெரிவித்தார்.

குறித்த காணியிலுள்ள பாலர் பாடசாலை மற்றும் சிறுவர் பூங்கா என்பன இராமகிருஸ்ண மிஷன் மூலமே கட்டப்பட்டமை மற்றும் அவற்றின் தொடரச்சியான பராமரிப்பு, அங்கு கல்வி பயிலும் பாலர்களின் எதிர்கால கல்விச் செயற்பாடு என்பவற்றையும் கவனத்தில் குறித்த கட்டடங்கள் அமைந்துள்ள இடப்பரப்பினை மாத்திரம் அவர்களுக்கு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் நீண்ட கால குத்தகையில் வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என சபையினரால் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் குறித்த விடயமானது பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மயில்வாகனம் ரூபாகரன்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.மாசிலாமணி தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா.**

- **மாநகர சபையின் 7ம் வட்டாரத்தில் உள்ள மாமாங்கம் மயானத்தில் ஒரு பகுதியை மாநகர சபையின் விளையாட்டு மைதானமாக எல்லையிட்டு பயன்படுத்தல்.**

கௌரவ உறுப்பினர் திரு.புஸ்பராஜ் ரூபராஜ் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, ஒரு முக்கியமான விடயம். எல்லாம் நிருவாகத்தில் இருக்கின்ற ஆட்கள் செய்யவில்லை, வேலை செய்யவில்லை என்று நீங்கள் முன்னிறுத்தி கதைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். இங்கு நடைபெறுகின்ற விடயங்களில் என்னால் கொண்டு வந்த பிரேரணை கூட இன்று இங்கு நடைமுறைக்கு வரவில்லை. அந்த பிரேரணை தொடர்பில் கடந்த சபையில் நான் கொண்டு வந்த போது இது கூட்டறிக்கைளில் பதியப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தேன். இந்த பிரேரணை சம்பந்தமான விடயத்தினை வருகின்ற சபையில் குழு தீர்மானிக்காத பட்சத்தில் இந்த சபை மூலம் தீர்மானத்தினை கொண்டு வர வேண்டும் என்றும் அது தெளிவாக அறிக்கையாக பதியப்பட வேண்டும் என்றும் சொல்லியிருந்தேன். இதற்குச் சாட்சியாக சபையோர் இருக்கின்றார்கள். எனவே உங்களுடைய முன்மொழிவில் கூட இது சம்பந்தமாக தீர்மானத்தினை நிறைவேற்றக் கூடிய ஒரு தீர்மானம் மிக்க ஒரு முன்மொழிவு இங்கு கொண்டு வரப்படவில்லை. இதற்கான அதாவது இந்த மைதானம் சம்பந்தமான தீர்மானத்தினை இந்த சபை மூலம் இன்று முடிவிற்கு கொண்டு வரப்பட வேண்டும். ஏனென்றால் இதன் மூலம் கிராமங்களுக்குள்ளே முரண்பாடுகளையும் பகைகளையும் வளர்த்துக் கொள்ளுவதற்கு நாம் இன்னும் இடமளிக்கக் கூடாது. எனவே சபை மூலம் தீர்மானத்தினை இன்று நிறைவேற்றி அதற்குரிய வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், இதற்கு சபையோர் ஆதரவு வழங்க வேண்டும். சரியோ, பிழையோ இதற்கு என்ன நியாயமான தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அதை இன்றே சபை மூலம் மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் மேற்கொள்ள வேண்டும். இங்கு இருக்கும் ஒவ்வொருவரும் மக்கள் பிரதிநிதிகள். தங்களால் நியமிக்கப்பட்ட குழுவினால் அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அது சபைக்கு கொண்டு வரப்படவில்லை. நீங்கள் சிலரது முகதாட்சனை பார்த்து அதனை நிறுத்தி வைத்திருக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். இன்று இந்த சபை மூலம் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும். அது நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, சபையோரும் இதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், நாங்கள் நிகழ்ச்சி நிரலுக்குள் போவோம் என குறிப்பிடும் போது, கௌரவ உறுப்பினர் திரு.புஸ்பராஜ் ரூபராஜ் அவர்கள் குறுக்கீடு செய்து பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, இது கூட்டறிக்கையாக பதியப்பட்டது. நான் கொண்டு வந்த பிரேரணை கூட்டறிக்கையாக பதியப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதனை சபைக்கு கொண்டு வர வேண்டிய அவசியமில்லை. அதற்குரிய ஏற்பாடு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய எழுத்து மூலமான அறிக்கையை, எழுத்து மூலமான அனுமதியை எங்களுடைய ஆணையாளர் குழுவின் அறிக்கையின் பிரகாரம் செய்வார் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.புஸ்பராஜ் ரூபராஜ் அவர்கள் மீண்டும் பேசுகையில், சபையில் இந்தப் பிரேரணை 2021ம் ஆண்டு முதலாம் மாதம் போடப்பட்டுள்ளது. அதற்குரிய எந்தவிதமானவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. குழு அமைத்திருந்தீர்கள். குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதை சபைக்கு தான் கொண்டு வர சொல்லப்பட்டிருந்தது. இதற்கான சகல ஆவணங்களும் என்னிடம் சரியாக இருக்கின்றது. இதற்கு இங்கு இருக்கும் ஒவ்வொருவரும் சாட்சிகள் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நீங்கள் சகல பிரச்சனைகளையும் பிரேரணை மூலமாக இந்த இடத்தில் கொண்டு வாருங்கள். நான் போடுகின்றேன் என்று கடந்த சபைக்கு முதற் சபையில் என்னிடம் சொன்னீர்கள். நான் ஏற்கனவே ஒவ்வொரு சபையிலும் வலியுறுத்திக் கொண்டு வருகின்ற விடயம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அத் தீர்மானங்கள் நிர்வாகத்திடம் கையளிக்கப்படுகின்ற போது நிருவாகம் அதனை நடைமுறைப்படுத்தவில்லை என்று கூறுகின்றீர்கள். நிருவாகம் வினைத்திறனற்றது என்ற வாதத்தினை உறுப்பினர்கள் முன்வைக்கின்ற சந்தர்ப்பத்திலே சபையை சீராக நடத்திக் கொண்டு போக வேண்டும் என்பதற்காக அந்த சபையை முடித்து விடுகின்றீர்கள், மாதமும் உருண்டு ஓடி விடுகின்றது. அங்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதில்லை, வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதில்லை, இப்போது புதிய ஆணையாளர் வந்திருக்கின்றார். அவர் ஒரு மாதத்தில், இரண்டு மாதத்தில் இவற்றைச் செய்வார் என்று நம்பிக் கொண்டிருக்கின்றோம், சபை எப்போது கலையும் என்று தெரியாது. எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பான அறிக்கையை உடனடியாக சமர்ப்பியுங்கள். இப்பொழுது கௌரவ உறுப்பினர் கொண்டு வந்த பிரேரணை ஏற்கனவே கொண்டு வரப்பட்ட பிரேரணை. அது அந்த மைதானம் சேமகாலைக்கு பயன்படுத்தப்படுவதா?, அந்த இளைஞர்களின் விளையாட்டுக்காக பயன்படுத்தப்படுவதா? என்பதாகும். கௌரவ உறுப்பினர்களால் எடுக்கப்படுகின்ற தீர்மானமே பிரதானமான தீர்மானமாகும். தீர்மானம் எடுக்கப்படாமல் ஆணையாளர் எவ்வாறு அவர்களுக்கு கடிதம் கொடுப்பது. இந்தச் சபையானது தீர்மானம் எடுக்க வேண்டும். சபையால் சேமக்காலைக்கு கொடுப்பதா? அல்லது விளையாட்டு மைதானத்திற்கு கொடுப்பதா? என தீர்மானம் எடுங்கள். அதில் ஒரு பிரச்சனையில்லை. கௌரவ உறுப்பினர் மிக நீண்ட நாட்களாக இதனைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார் எனவும் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இவ்விடத்தில் குறுக்கிட்டுப் பேசுகையில், இங்கு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செல்லாது அதிலிருந்து விலகிச் செல்கின்றீர்கள் என தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், நான் விலகிச் செல்லவில்லை. நீங்கள் கொண்டு வருகின்ற நிகழ்ச்சி நிரலை உங்களுக்குச் சார்பான உறுப்பினர்கள் கதைக்கும் போது நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாலும் கொண்டு செல்கின்றீர்கள். எனவே சபையை நீதியாக நடத்துங்கள் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், இதற்கான குழுவின் தலைவர் எழுத்து மூலம் அறிக்கையை தந்துள்ளாரா?, கௌரவ முதல்வர் அவர்களே, நிகழ்ச்சிநிரல் படி போவோம், நிகழ்ச்சிநிரல் படி போவோம் என்று சொல்கின்றீர்கள். இன்றைக்கு என்ன நடந்தது?. நீங்கள் நிகழ்ச்சி நிரலின் படி சபையைக் கொண்டு செல்லுங்கள் என தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு. புஸ்பராஜ் ரூபராஜ் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், எப்படி நிகழ்ச்சி நிரல்படி கொண்டு செல்கின்றது? நான் சென்ற கூட்டக் குறிப்பில் குறிப்பட்டுக் கொண்டு வந்த விடயத்தினை நீங்கள் ஏன் இங்கு கொண்டு வரவில்லை? என்பது தான் என்னுடைய கேள்வியாகும் எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலிறுக்கையில், அதனைக் கொண்டு வரவில்லை எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு. புஸ்பராஜ் ரூபராஜ் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், இந்த விடயத்தில் நீங்கள் பக்கச் சார்பாக நடக்கின்றீர்களா?, ஏன் கொண்டு வர இயலாது? எனவும் வினாவினார்?.

கௌரவ உறுப்பினர் திரு.துரைசிங்கம் மதன் அவர்கள் பேசுகையில், இங்கு வார்த்தைப் பிரயோகங்கள் மிகவும் மோசமாக போய்க் கொண்டு இருக்கின்றது. அதனால் நான் இடையில் கதைக்கவில்லை. ஏனென்றால் எனது பெயரைத் தான் இரண்டு பக்க உறுப்பினர்களும் கொண்டு போய் மாட்டி விடுகின்றார்கள். இதனால் இதில் நான் தலையீடு செய்யவில்லை. நேரம் வரும் போது எதற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்பது தனிப்பட்ட ரீதியாக எனக்குத் தெரியும். ஆனால் சபையில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டு குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. எனவே அக் குழுத் தலைவர் இது பற்றி ஒன்றும் பேசாமல் இருக்கக் கூடாது. அவர் இது பற்றித் தெளிவு படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இந்த பிரேரணையானது இது தோற்கடிக்கப்பட போகின்றது. நாங்கள் வெல்ல போகின்றோம். அதனால் தான் வாக்கெடுப்பிற்கு கொண்டு போகாது செல்கின்றீர்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் தோல்வியடைப் போகும் சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்பினை தவிர்த்துச் செல்கின்றீர்கள் என்பது தான் உண்மை எனத் தெரிவித்தார்.

கௌரவ பிரதி முதல்வர் திரு.கந்தசாமி சத்தியசீலன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இந்த விடயம் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பாக கௌரவ உறுப்பினரால் பிரேரணையாக கொண்டு வரப்பட்டதாகும். அவர் சென்ற கூட்டக் குறிப்பில் இதனை உள்வாங்கி அடுத்த சபையிலே கொண்டு வந்து நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். இன்று அந்த கூட்டறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. கூட்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு சரி, பிழை பார்த்து முன்மொழிந்து வழிமொழிய சந்தர்ப்பம் வழுங்கப்பட்டிருந்தால் அந்த விடயத்தினை கௌரவ உறுப்பினர் சுட்டிக் காட்டியிருப்பார். நான் நினைக்கின்றேன் இந்த விடயத்திற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. கௌரவ முதல்வர் அவர்களே, அதற்கு தலைவராக முதலில் என்னையே நியமித்திருந்தீர்கள். நான் இந்த விடயத்திலிருந்து சற்று ஒதுங்கியிருந்தேன். காரணம் இதில் பல சிக்கல்கள் இருக்கின்றது. அதற்கு பிற்பாடு ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்குத் தலைவராக கௌரவ உறுப்பினர் திரு.சிவம் பாக்கியநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவரது தலைமையில் அக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்த விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்தும், இரு சமூகங்களுக்கிடையில் சென்று அவர்களுடைய கருத்துக்களை கேட்டறிந்தும் அந்த குழு அதற்கான அறிக்கையினை சமர்ப்பித்திருக்கின்றார்கள். எனவே அக்குழுவினுடைய அறிக்கையை தாங்கள் இந்த உயரிய சபையில் முன்வைத்து அதற்கான தீர்வினை பெற்றுக் கொடுப்பது சாலச் சிறந்தது எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது என்றால், அதன் தலைவர் அது சம்பந்தமாகவும், அந்த அறிக்கை பற்றியும் எங்களிடம் எதுவும் சொல்லவில்லை. அந்த அறிக்கை பற்றி நான் தொலைபேசியூடாக அவரிடம் கேட்டேன். நான் இன்னும் கொடுக்கவில்லை என்று சொல்லியிருந்தார். இப்படியிருக்கையில் எப்படி குழு அறிக்கையை சமர்ப்பித்தவர்?. அவர் தனிப்பட்ட முறையில் கொடுத்தால் அக்குழுவில் உள்ளவர்களுக்கு என்ன விடயம் கொடுக்கப்பட்டது என்பது தெரியாது தான் என்றும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சிவம் பாக்கியநாதன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இந்த சபையால் தான் நான் அதற்கு தலைமை தாங்குமாறு நியமிக்கப்பட்டதாகும். நான் இந்த பிரச்சனைக்குரிய விடயங்களை ஆராய்ந்தேன். ஆனால் அதில் இரண்டு பக்கமும் நியாயங்கள் இருக்கின்றது. எங்களால் ஒரு பக்கம் சாய்ந்து செயற்படயியலாது என்ற காரணத்தினால், அங்கு ஒவ்வொரு கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்களுடனும் கலந்துரையாடிய பின்பே அந்த விடயங்களை உள்ளடக்கியதாக அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இப்ப இருக்கின்ற பிரச்சனை கௌரவ உறுப்பினர் அதனை சபைக்கு கொண்டு வரப்பட்டு இதற்கு தீர்வு வேண்டும் என்று சொல்கின்றார். ஆனால் இந்த விடயத்தில் நாங்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் முக்கியமாக சொல்லப்பட்டிருக்கின்ற விடயமானது இதற்கு முன்னர் இருந்த சபையில் இதற்கான ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதாகும். அதாவது இந்த சேமக்காலையின் ஒரு பகுதியினை அந்த விளையாட்டு கழகம் பயன்படுத்தாலம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது என்பதாகும். அதனை நாங்கள் அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கின்றோம். அந்த சபையால் எடுத்த தீர்மானத்தினை எங்களுடைய சபை மாற்ற முடியாது என்பதனையும் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். ஆகவே இங்கு அந்த வட்டாரத்திற்குள் மட்டுமல்லாது மாநகர சபையின் முழு எல்லைக்குள்ளும் உறுப்பினர்கள் இருக்கின்றோம். இது எங்களுடைய மக்கள், இது எங்களுடைய மக்களுக்குரிய பிரச்சனை, இளைஞர்களுக்குரிய பிரச்சனை, இதனை எல்லோரும் சேர்ந்து ஆராய்ந்து ஒரு சுமுகமான முடிவிற்கு வரலாம் என்று தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகையில், அந்த அறிக்கையில் உங்களுடைய பரிந்துரை என்ன அவர்கள் விளையாடலாம், கிறவல் போட்டு விளையாடலாம், ஆனால் கட்டடம் ஏதும் அங்கு கட்ட முடியாது என்பது தானே எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.புஸ்பராஜ் ரூபராஜ் அவர்கள் குறுக்கிட்டு, இதைத் தானே நாங்களும் கேட்கின்றோம். இதனை ஏன் வைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். சபைக்கு கொண்டு வாருங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, அவர்கள் தற்போதும் அங்கு விளையாடிக் கொண்டு தான் இருக்கின்றார்கள். பிரேதங்கள் அடக்கம் செய்யப்படும் போதும் கூட விளையாடிக் கொண்டு தான் இருக்கின்றார்கள். பிரச்சனையில்லை. அதனால் இப்ப இருக்கின்ற மாதிரியே இருக்கட்டும் என தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.தம்பிராஜா இராஜேந்திரன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நாங்கள் கூறுவது என்னவென்றால், அந்த சேமக்காலையில் விளையாடலாம் என்று முந்திய சபை கடிதம் கொடுத்திருக்கின்றது. அது உண்மை, ஆனால் அந்த சபை ஏன் அதற்கு நிரந்தரமாக கடிதம் கொடுக்கவில்லை. தற்காலிகமாக விளையாடலாம் என்று தான் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏன் அந்தச் சேமக்காலையை பிரித்துக் நிரந்தரமாக கொடுத்திருக்கலாம் தானே? அந்த சபை ஏன் அப்படிக் கொடுக்கவில்லை?. அடுத்தது இங்கு பேசுகின்ற போது கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெட்ணராஜா திலீப்குமார் அவர்கள்

இதனை வாக்கெடுப்பிற்கு விட்டால் நாங்கள் வெல்லுவோம் என்ற அந்த பயத்தில் தான் இதனை வாக்கெடுப்பிற்கு விடவில்லையென்று கூறியிருந்தார். அவருக்கு கதைப்பதற்கு உரிமையில்லை, அவருக்கு சேமக்காலை சொந்தமில்லை. சேமக்காலைக்கு சொந்தகாரன் நான், அது என்னுடைய வட்டாரத்திலுள்ளது. இந்த வட்டாரத்தில் இறப்பவருடைய பிரேதத்தினை தான் அங்கு அடக்கம் செய்கின்றார்களே தவிர வேறு வட்டாரத்தில் இறப்பவர்களுடைய பிரேதத்தினை அங்கு அடக்கம் செய்வதில்லை. இதற்கு கௌரவ பிரதி முதல்வரின் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. ஆனால் பிரதி முதல்வர் அதிலிருந்து விலகி விட்டார். தற்போது சேமக்காலையை விளையாட்டு மைதானமாகக் கேட்டது யார்?. அடுத்தது இதற்காக ஒரு குழு அமைத்தீர்கள். அந்தக் குழு எங்கே விசாரித்தது?, யாரைக் கூப்பிட்டு விசாரித்தது?, முன்னைய சபையின் முதல்வர் கொடுத்த கடிதத்தினை வைத்து விசாரித்து விட்டு தீர்மானம் எடுத்திருக்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சிவம் பாக்கியநாதன் அவர்கள் குறுகிட்டுப் பேசுகையில், நாங்கள் ஆட்களை கூப்பிட்டு கதைக்காட்டியும் அந்த வட்டாரத்தில், அந்த பிரதேசத்தினை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற முக்கிய ஆட்களுடன் நான் தொடர்பு கொண்டிருந்தேன்.நீங்கள் அந்த அறிக்கையினை வாசித்து பார்த்தால் ஆண்டு கணக்கில் என்ன நடந்திருக்கின்றது என்பது தெரியும் எனத் தெரிவித்ததுடன், கௌரவ முதல்வர் அவர்களை அந்த அறிக்கையினை வாசித்து காட்டுங்கள் எனவும் கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இது ஒரு கௌரவமான சபை. எற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானம் சரியா?, பிழையா? எனவும் வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் இதற்குப் பதிலிறுத்துப் பேசுகையில், இதற்குரிய நடவடிக்கையினை ஒரு கிழமைக்குள் ஆணையாளர் செய்வார் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகையில், ஆணையாளர் எப்படி செய்வது? சபையால் தீர்மானம் எடுத்து கொடுத்தால் தானே ஆணையாளர் நிறைவேற்றலாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இது சபைக்கு கொண்டு வரப்பட்ட விடயம். குழு அமைத்து பெறப்பட்ட குழுவின் அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதனடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். அக்குழு அறிக்கையை எங்களுக்கு சமர்ப்பித்திருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் பேசுகையில், அறிக்கையினை இங்கு சமர்ப்பிக்க முன்னர் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அவர் என்ன விடயம் சமர்ப்பித்திருக்கின்றார் என்பது எங்களுக்கு தெரியாது? எனக் கூறினார்.

(பதிவு தெளிவில்லை)

கௌரவ பிரதி முதல்வர் திரு.கந்தசாமி சத்தியசீலன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, ஏற்கனவே இருந்த சபையினால் தற்காலிகமாக மைதானமாக பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. அதற்கு சபையால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. தற்போது கௌரவ உறுப்பினர் திரு.புஸ்பராஜ் ரூபராஜ் அவர்கள் கேட்பதும் தற்காலிகமாக அந்த மைதானத்திலே உதைபந்தாட்ட வீரர்கள் பயிற்சியில் ஈடுபடுவதற்கு ஆகும். அவர்கள் அங்கு பாதணிகளை அணிந்து தான் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும் என்பதனால் அவர்கள் கிறவல் இட்டு தாங்கள் விளையாடுவதற்கும் தான் கேட்கின்றார்கள். அவர்கள் அங்கு எந்தவிதமான கட்டுமாண பணிகளையும்

மேற்கொள்வதற்கில்லை. அதற்கு மாநகர சபை அனுமதி வழங்கத் தேவையுமில்லை. அங்கு கிறவலிட்டு அவர்கள் பயிற்சியினை மேற்கொள்வதற்கு மாநகர சபையால் இன்று தீர்மானம் நிறைவேற்றி எதிர்காலத்தில் மயானத்திற்கு அவ்விடம் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களிலே மைதானத்தினை மயானமாக மாற்றுவதற்கும் ஏதுவாக அந்த விளையாட்டுக் கழகம் உடன்பாட்டுடன் அவர்களுக்கு ஒரு ஒப்பந்தம் ஊடாக அதனை வழங்குகின்ற வேளையில் இரு சமூகங்களுக்கிடையேயும் முரண்பாட்டினை தோற்றிவிக்க விடாமல் ஒரு நடுநிலையாக இருந்து செயற்படுத்த முடியுமெனக் கருதுகின்றேன். அந்த இடம் தேவைப்படுகின்ற வேளையில் மயானமாக பயன்படுத்த முடியும். அதுவரை காலமும் அவ்விடத்தில் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு மாத்திரம் என அதனை தெளிவாக சுட்டிக்காட்டி ஒப்பத்தினை ஆணையாளர் ஊடாக மேற்கொள்ளலாம் என நான் நினைக்கின்றேன். இதன் மூலம் ஒரு தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும். எனவே கௌரவ முதல்வர் அவர்கள் தங்களுக்கு பாரிய பொறுப்பிருக்கின்றது, அதாவது இந்த விடயத்தினை இவ்வாறான நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதனை வழங்குவதற்கு அந்த உயரிய சபையில் இன்று தாங்கள் தீர்மானத்தினை எடுத்து வழங்க வேண்டும் என்பது என கருத்தாகும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, அங்கு அவர்கள் விளையாடும் மைதான இடப்பரப்பிற்குள்ளே 17 புதையல்கள் இருந்தன. அவற்றை உடைத்து விட்டுத் தான் தற்போது விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கான விபரங்களை அங்கே உள்ள மக்கள் எங்களிடம் தந்திருக்கின்றார்கள். ஆதலால் அதனையும் நீங்கள் பாருங்கள். அவர்கள் அங்கு புதையல் இல்லையென்று தான் சொல்வார்கள். ஆனால் நிலத்தினை தோண்டிப் பார்த்தால் தான் தெரியும் எனவும் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், அதுவெல்லாம் நடந்து முடிந்த விடயங்கள். இப்போதைக்கு தீர்மானம் ஒன்றை கௌரவ பிரதி முதல்வர் அவர்கள் கூறியது போன்று மேற்கொள்ள முடியும். காலையில் நீங்கள் ஆணையாளருடன் கதைத்ததை நானும் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன். ஒரு இணக்கப்பாட்டுடன் தற்காலிகமாக அவர்கள் விளையாடுவதற்கு தீர்மானம் எடுப்போம் என தெரிவித்தார். அங்குள்ள இளைஞர்களும் சரி, அங்குள்ள பொதுமக்களும் சரி அங்கு வசிக்கின்றவர்கள் தான். அங்கு விளையாடுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு, ஒரு காலத்தில் அந்த இளைர்கள் மரணித்தால் கூட அங்கே தான் புதைக்கப்பட வேண்டியவர்கள். அதனால் ஒரு இணக்கப்பாட்டுடன் சேமக்காலைக்கு ஒரு தேவை ஏற்படும் போது திருப்பி கொடுக்க வேண்டும் என்ற தீர்மானத்தினை நிறைவேற்றி ஒரு கடிதத்தினை வழங்கினால் ஒருவருக்கும் பிரச்சனையில்லை. இதற்காக ஏன் எல்லோரும் முரண்படுகின்றீர்கள்? எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு. ஸ்ரீபன் ராஜன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நான் மீண்டும் கூறிக் கொள்கின்றேன். அதாவது குழுவின் அறிக்கையினை குழுவிலுள்ள ஆறு உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டும். ஏனென்றால் குழுவிற்கு போனவுடனேயே வந்திருக்கின்ற உறுப்பினர்களின் கையொப்பத்தினை எடுக்கின்றார்கள். அந்தக் கையொப்பத்தினை வைத்துக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்யலாம் தானே. ஆகவே அவர் சமர்ப்பித்த அறிக்கையில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று எங்களுக்குத் தெரிய வேண்டும். ஆகவே அவசரப்படாமல் இதற்கு நாட்கள் எடுத்து ஒரு நல்ல முடிவினை எடுக்கலாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ பிரதி முதல்வர் திரு.கந்தசாமி சத்தியசீலன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், குழுவினுடைய அறிக்கையென்று கூறுகிறார்கள், அந்தக் குழு முதல்வரிடம் அந்த அறிக்கையினை சமர்ப்பித்து இருக்கின்றது. குழுவிற்கு அப்பால் உயரிய சபை இருக்கின்றது. இந்த சபையில் எடுக்கின்ற தீர்மானம் தான் ஒரு உறுதியான தீர்மானம். எனவே நாங்கள் இங்கு கூறுவது மைதானத்திற்கு முற்று முழுதாக கொடுத்து விடத் தேவையில்லை. அதை தற்காலிகமாக பயன்டுத்துவதற்குத் தான் கொடுக்க வேண்டும். இங்கு ஒரு வார காலம், இரு வார காலம் என இழுத்தடிப்பது இதனை இந்த சபையில் நிறைவேற்றிக் கொடுக்காமல் இனிவரும் காலங்களிலே நிறைவேற்றி கொடுக்க வேண்டும் என்பது ஒரு சிலரது எண்ணப்பாடாக இருக்கலாம் என நான் நினைக்கின்றேன். ஆகவே கௌரவ முதல்வர் அவர்களே, இதில் பல விடயங்கள் உள்ளடக்கப் படுகின்றது. இதனை தாங்கள் கருத்திற் கொண்டு இன்று இந்த உயரிய சபையிலே இவ்வாறான தீர்மானத்தினை மேற்கொள்ள முடியும் என தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இதற்கெல்லாம் வாக்கெடுப்பிற்குப் போகத் தேவையில்லை. தீர்மானம் இருக்கின்றது. அந்தத் தீர்மானம் சரி என்று சொன்னால் சரி தானே எனக் கூறினார். அதற்கான குழுவின் பரிந்துரை என்னவென்றால் அவர்கள் தொடர்ச்சியாக விளையாடலாம், கிறவல் போடலாம், ஆனால் கட்டடம் ஏதும் கட்ட முடியாது. சேமக்காலையில் இடம் இல்லாமல் போகும் சந்தர்ப்பத்தில் அவர்கள் அதனை விட்டுக் கொடுப்பார்கள். அதனை தீர்மானமாக மேற்கொள்ளத் தேவையில்லை. அதனை ஆணையாளர் வழங்குவார் எனத் தெரிவித்தார்.

(பதிவு தெளிவில்லை)

கௌரவ உறுப்பினர் சிவராசா சிவராஜ் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் கௌரவ முதல்வர் அவர்களே, கொண்டு வந்த தீர்மானத்தில் தெளிவாக சொல்லப்படுகின்றது விளையாடுபவர்கள் விளையாட்டும் தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் சோமகாலைக்கு பயன்படுத்தலாம் என்று. எல்லாம் ஓம் என்று பிறகு வாக்கெடுப்பிற்கு போக வேண்டும் என்று ஏன் கருதுகின்றார்கள் என தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் துரைசிங்கம் மதன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் வாக்கெடுப்பிற்கு போவோம் ஏன் என்றால் அவர்களுடைய இரண்டு பேருடைய கோரிக்கையும் நியமானது ஏன் என்றால் இதில் நாளைக்கு சபை தீர்மானம் எடுத்து போய்விட்டது. அவர்கள் ஊர் ஆட்கள் அவர்களுக்கு கேள்விவரும் நீங்களும் இருந்து ஆமதித்து வந்துவிட்டீர்கள் என்று என தெரிவித்தார்.

(பதிவு தெளிவில்லை)

கௌரவ உறுப்பினர் சூசைமுத்து கிளனி வசந்தகுமார் பேசுகையில் கௌரவ முதல்வர் அவர்களே, இக்காணி மக்கள் குடியேற்றத்திற்கு பிரதேச செயலத்திற்கு இக்காணி சொந்தமானது. இங்கு சேமகாலையாக பயன்படுத்தப்படும் பட்சத்தில் அது மாநகர சபைக்கு கைமாற்றப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே இருந்த சபை கௌரவமான சபை ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றியிருக்கின்றது. தீர்மானமானது மாவட்ட நீதிமன்ற தீர்ப்பிற்கமைவாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அந்த தீர்மானத்தினை தீர்மானமாக கொண்டு வந்து எங்காளல் நிறைவேற்ற முடியுமா? ஆகவே அந்த கௌரவ சபையை அவமதிக்கின்றீர்களா? அங்கே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது கௌரவ முதல்வர் அவர்களுக்கு நீங்களே கடைப்பிடித்து முறையான தீர்மானத்தினை வழங்குமாறு. நாங்கள் கேட்கின்ற கேள்வி நாங்கள் இங்கு தீர்மானத்தினை எடுக்கின்றோம். வருகின்ற இன்னொரு சபை தீர்மானத்தினை நிறைவேற்று கின்றது. ஆகவே அந்த சபையின் ஆளுமையும், கௌரவமும் பாதுகாக்கப்படுமா? என கேட்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில் அதனால் சொல்லுகின்றேன் வாக்கெடுப்பு ஒன்று தேவையில்லை. எழுத்த மூலமான அறிக்கையினை வைத்து கௌரவ உறுப்பினர் சசிகலா

விஜயதேவா குறுக்கீட்டு பேச முற்பட்ட வேளை கௌரவ முதல்வர் அவர்கள் கொஞ்சம் பொறுங்கள் கௌரவ உறுப்பினர் சசிகலா அவர்களே கௌரவ உறுப்பினர் வசந்தகுமார் அவர்கள் குறிப்பிட்டது போன்று இன்னொரு சபை வந்து கொடுக்க இயலாது என்று தீர்மானிக்க முடியாது தானே இந்த அறிக்கையினை வைத்துக் கொண்டு நாங்கள் கொடுத்து விடுவோம் என தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் சசிகலா விஜயதேவா அவர்கள் பேசுகையில், நாங்கள் மக்கள் பிரதிநிதி அதனால் நீங்கள் வாக்கெடுப்பிற்குச் சென்றால் தான் அதை நாங்கள் மக்களிடம் காட்டிக் கொள்ளலாம் என தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில் நாங்கள் ஒரு சபை எடுத்த தீர்மானத்தினை நாங்கள் இரத்துச் செய்தோம் என்றால் இன்னொரு நாளைக்கு எங்களுடைய தீர்மானங்களும் இரத்துச் செய்யப்படலாம். அதனால் சட்டம் இருக்கின்ற படியால் எதிர்வரும் கிழமைக்குள் ஆணையாளர் இந்த அறிக்கைக்கு அமைவாக எழுத்து மூலமான அனுமதியை வழங்குவார் என்ற ஒரு விடயத்தினை உங்களுக்கு தற்போது தரலாம். அப்படி இல்லையாயின் ஒரு தீர்மானம் உள்ள நிலையில் மற்றொரு தீர்மானத்திற்கு போகலாமா? என்பது தொடர்பில் எங்களுடைய சட்டத்தரணியிடம் ஆலோசனை பெற வேண்டும். அதற்கு பின்பு தான் இதற்கான நடவடிக்கையை எடுக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, கடந்த சபையில் எடுத்த தீர்மானங்கள் தொடர்பில் இந்த சபையில் காலத்தின் தேவைக்கேற்ப தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளலாம். இங்கு இரண்டு உறுப்பினர்கள் வாக்கெடுப்பிற்கு செல்லுமாறு கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். வாக்கெடுப்பிற்கு போவதனால் எந்தப் பிரச்சனையுமில்லை. ஒன்றில் தோல்வியடையப் போன்கிறது. அல்லாவிட்டால் வெற்றி பெற போகின்றது எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு. சீனித்தம்பி ஜெயந்திரகுமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, வாக்கெடுப்பு தேவையில்லை. நீங்கள் குறிப்பிட்ட மாதிரி எழுத்து மூலம் அறிவியுங்கள். அதனை ஏற்றுக் கொள்வதென்றால் ஏற்றுக் கொள்ளட்டும் இல்லாவிட்டால் இத்துடன் முடித்து விடுங்கள் எனவும் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு. விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இதற்கு முன் யாட் வீதிக்கு “புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வீதி” எனப் பெயர் வைப்பதாக ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதுவும் ஏற்கனவே முன்னைய சபையில் எடுக்கப்பட்ட தீர்மானம் தான். ஏற்கனவே ஓர் சபையில் எடுத்த தீர்மானத்தினை ஏன் இந்தச் சபைக்கு கொண்டு வர வேண்டும். அதே போன்றது தான் இந்த விளையாட்டு மைதான விடயமும் ஆகும். அதேபோன்று இவ்விடயத்திற்கும் சபையில் தீர்மானம் எடுப்பதில் என்ன தவறு இருக்கின்றது? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பதிலளித்துப் பேசுகையில், இங்கு ஒரு விடயத்தினை விளங்கிக் கொள்ள வேண்டும். நாங்கள் அந்த தீர்மானத்தினை திருத்த வில்லை. அந்தத் தீர்மானத்தினை அமுல்படுத்துமாறு தான் கோரிக்கையும் உள்ளது. சரியான தீர்மானம் இருக்குமென்றால் அந்த விளையாட்டு கழகத்தினரை அங்கு விளையாடச் சொல்லுங்கள் எனவும் தெரிவித்தார்.

(பதிவு தெளிவில்லை)

கௌரவ பிரதி முதல்வர் திரு.கந்தசாமி சத்தியசீலன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, தயவு செய்து முதல்வர் அவர்கள் மூலாசனத்தில் இருக்கும் போது கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்கள் பல தடவை தங்களுக்கு விரல்களை நீட்டியும், கைகளை காட்டியும் பேசிக் கொண்டிருக்கின்றார். இதே போன்று அமரத்துவமடைந்த கௌரவ

உறுப்பினர் திருமதி.செல்வி மனோகர் அவர்கள் ஒரு தடவை கை நீட்டி பேசியதிற்கு அவருக்கு தங்கள் ஒரு மாத கால தடை விதித்திருந்தீர்கள். நீதி தேவதை என்பது ஒன்று தான். எனவே பல தடவைகள் கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்கள் தங்கள் மூலாசனத்தை கை நீட்டி பேசிக் கொண்டு இருக்கின்றார். இதனை தாங்கள் கவனத்திற் கொள்ளுமாறு தங்களை தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.தம்பிராஜா இராஜேந்திரன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இந்த சேமக்காலை விடயம் தொடர்பாக முன்னாள் முதல்வர் திருமதி.சிவகீத்தா பிரபாகரன் அவர்கள் கொடுத்தன் படி இதை சபையில் விவாதிக்கத் தேவையில்லை. இதற்கென குழுவும் அமைத்திருக்கத் தேவையில்லை. இது 1953ம் ஆண்டு பாரளுமன்றத்தில் ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்ட சேமக்காலை. இதை மாற்றி அமைப்பதற்கு தீர்மானம் உருவாக்கப்படுகின்றது. அதில் இருந்த 17 கட்டடங்கள் உடைக்கப்பட்டு மூடப்பட்டு அந்த விளையாட்டு மைதானம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதை நாங்கள் எதிர்க்கவுமில்லை. அவர்கள் தற்போதும் விளையாடிக் கொண்டு தான் இருக்கின்றார்கள். இதை நீங்கள் திருப்பி கொடுக்க போகின்றீர்கள் என்றால் அதை வாக்கெடுப்பிற்கு விட்டு அதற்குரிய கூடிய பெரும்பான்மை இருக்கின்றது என்று நினைக்கின்றேன். அதன் பிரகாரம் அதை நீங்கள் கொடுக்கலாம். அதைப்பற்றி எங்களுக்கு ஒன்றுமில்லை. இதை வாக்கெடுப்பிற்கு விடுவது தான் சிறந்தாக இருக்கும் என நினைக்கின்றேன் என கூறினார். இதை வாக்கெடுப்பிற்கு விட்டு முறைப்படி செய்யுங்கள். அவர்களின் கடிதத்தின் படி கொடுக்கின்றது என்றால் சபைக்கு வந்திருக்க கூடாது. நீதிமன்ற தீர்ப்பும் உள்ளது. நீதி மன்றத்திற்கு திருப்பிப் போக இயலாது. அதனால் அதை வாக்கெடுப்பிற்கு விட்டு ஒருவர் எதிர்த்தாலும் நீங்கள் 37 பேரும் ஆதரவு கொடுத்தாலும் சரி அது பிரச்சனையில்லை. இதை வாக்கெடுப்பிற்கு விட்டு செயற்படுத்துமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.கந்தசாமி ரகுநாதன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, ஏற்கனவே சொன்ன நிபந்தனைகளுடன் வாக்கெடுப்பிற்கு செல்வதனால் எவருக்கும் பாதிப்பு எற்படாது. அந்த நிபந்தனையுடன் வாக்கெடுப்பிற்குச் செல்வது என்று கூறி பிரச்சனையை முடித்து விடுவோம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.தம்பிராஜா இராஜேந்திரன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, நாங்கள் நீதி மன்றம் செல்ல வேண்டியுள்ளதால் எங்களுக்கு வாக்கெடுப்பு தேவை எனத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இதற்கு வாக்கெடுப்பிற்கு போகத் தேவையில்லை. குழுவின் பரித்துரைக்கமைவாக அவர்களுக்கு கொடுக்கலாம். அனால் அந்த இரண்டு கௌரவ உறுப்பினர்களும் வாக்கெடுப்பு தேவை எனக் கேட்பதால் வாக்கெடுப்பிற்கு போவோம் எனத் தெரிவித்தார்.

(பதிவு தெளிவில்லை)

கௌரவ உறுப்பினர் திரு. விஜயகுமார் பூபாலராஜா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், இன்னொரு சபையால் எடுக்கப்பட்ட தீர்மானம் இதுவாகும். அவ்வாறு எடுக்கப்பட்ட இந்த விடயம் கேள்விக் குறியாக இருந்தால் அது ஆறு மாதத்திற்கு பிற்பட்ட காலத்தில் மீள சபைக்கு கொண்டு வருவதற்கான அதிகாரம் இந்த சபைக்கு இருக்கின்றது. ஆகவே அதை இங்கு கொண்டு வரலாம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சிவராசா சிவராஜ் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், அந்த வட்டார உறுப்பினர் திரு.தம்பிராஜா இராஜேந்திரன் அவர்கள் வாக்கெடுப்பிற்குப் போகச் சொல்கின்றார். எங்களுடைய கேள்வி என்னவென்றால், கௌரவ உறுப்பினர் திரு. புஸ்பராஜ் ரூபராஜ் கொண்டு வந்த பிரேரணைக்கு அமைவாக அவர்கள் அங்கு கிறவலிட்டு விளையாடட்டும், சேமக்காலையும்

இருக்கட்டும், விளையாடும் பகுதியில் கட்டடம் ஏதும் கட்டுவதில்லை. அங்கு கிறவல் போட்டு விளையாடுவதனால் கௌரவ உறுப்பினர் திரு. தம்பிராஜா இராஜேந்திரன் அவர்களுக்கு எதுவும் பிரச்சனையா? ஏன் வாக்கெடுப்பிற்கு போக வேண்டும்?. அங்கு கட்டடம் கட்டுவதற்கு அனுமதியில்லை. இந்த வாக்கெடுப்பு வருகின்ற நேரத்தில் அமிர்தகழி பக்கம் எங்களுடைய ஊரவர்களும் இருக்கலாம், நண்பர்களும் இருக்கலாம். மாமாங்கம் பகுதி ஆட்களுக்கு சேமகாலையாக கள்ளியங்காடு இருக்கின்றது அவர்கள் எங்களிடம் சொல்கின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், நாங்கள் அங்கு விளையாட வேண்டாம் எனச் சொல்லவில்லை. விளையாடுங்கள். தற்போது விளையாடுகின்ற மாதிரியே விளையாடிக் கொண்டிருங்கள். இதனை சபைக்கு கொண்டு வந்தவர் தான் வாக்கெடுப்பிற்கு ஒத்து வரலில்லை எனத் தெரிவித்தார்.

கௌரவ பிரதி முதல்வர் திரு.கந்தசாமி சத்தியசீலன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, விளையாட்டைப் பற்றி தெரிந்தவர்களுக்குத் தான் அது புரியும். நான் விளையாட்டின் அடிப்படையில் வந்தவன் என்ற வகையில் நான் மிகவும் தெளிவாக கூறியிருந்தேன். அதாவது பாதணிகள் இட்டு மணலிலே விளையாட முடியாது, எனவே இதனை புரிந்து கொள்ளாதவர்கள் தான் இப்போது இருக்கின்ற மாதிரி அங்கு விளையாடட்டாம் எனக் கூறுகின்றார்கள். பாதணிகள் இட்டு அவர்கள் பயிற்சி மேற்கொள்வதானால் அங்கு கிறவல் இடப்படல் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.சூசைமுத்து கிளனி வசந்தகுமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கௌரவ முதல்வர் அவர்களே, இது ஒரு பிழையான கருத்து. மாநகர சபைக்குரிய ஒரு மைதானம் என்றால் அது இப்படித் தான் இருக்க வேண்டும் என்று சட்டம் இருக்கின்றது. அதாவது கிறவல் போட்டிருக்க வேண்டும், பாதணி அணிந்து விளையாட வசதி வேண்டும், கோல்க் கம்பம் நடப்பட்டிருக்க வேண்டும் என்று உள்ளது. அதனை இங்கு கொண்டு வந்து திருத்தம் செய்யவும், விளம்பரப் படுத்தவும் வேண்டும் என்ற அவசியமில்லை. அது ஆணையாளருக்குரிய விடயம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், எங்களுக்கு எழுத்து மூலமான குழு அறிக்கை கிடைத்த படியால் அதனை நாங்கள் ஆணையாளருக்கு வழங்குவோம். அப்படி அதில் ஏதும் திருத்தம் வேண்டும் என்றால் திருத்தலாமா என சட்டத்தரணியிடம் கேட்போம். திருத்த முடியுமென்றால் அதனை அடுத்த சபை அமர்விற்கு கொண்டு வந்து திருத்துவோம் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகையில், கௌரவ முதல்வர் அவர்களே, ஏற்கனவே நீதி மன்றுக்கு போய் அதனை மாநகர சபைக்கு தந்து விட்டார்கள். மீண்டும் ஏன் பந்தினை அவர்களிடம் பாஸ் பண்ணுகின்றீர்கள்? என வினாவினார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இல்லை. அதனை நீதி மன்றத்திற்கு கொண்டு செல்லச் சொல்லவில்லை. எங்களுடைய சட்டத்தரணியிடம் தான் கேட்கச் சொல்கின்றேன் எனக் கூறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், இங்கு இருக்கின்ற சட்டத்தரணிகள் கூடுதலாக படித்தவர்கள். அவர்கள் தான் தங்களை பிழையாக வழி நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு விடயத்தை நன்றாக விளங்கிக் கொள்ளுங்கள். இந்த விடயம் இங்கு பிரேரணையாக வந்திருக்கின்றது. எந்தவொரு பிரேரணையும் கொண்டு வந்து அது தோற்கடிக்கப்படுகின்ற போது அந்த உறுப்பினர்களின் மக்கள் தான் பாதிக்கப்படுகின்றார்கள். வெற்றி பெறுபவர் அந்தப் பிரேரணையை நிறைவேற்றப் போகின்றார். அது தானே இந்தப் பிரேரணைக்கும் நடக்கப் போகின்றது. பாதிக்கப்பட்ட எதிர்தரப்பினர்

வாக்கெடுப்பிற்குப் போகச் சொல்லி கேட்கின்றார்கள். வாக்கெடுப்பிற்குப் போவதற்கு நீங்கள் ஏன் தயங்குகின்றீர்கள்? எனவும் கேட்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இது ஏற்கனவே இன்னொரு சபையால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை. ஆகவே நாங்கள் அதனை இந்த சபையால் திருத்துவது என்றால் சட்டத்தரணியிடம் சட்ட ரீதியான கருத்தினைப் பெற வேண்டும். ஆனால் இந்த அறிக்கையினை வைத்து நாங்கள் அவர்கள் அங்கு விளையாடுவதற்கும், அங்கு கிறவல் இடுவதற்கும் அனுமதி வழங்கலாம் எனக் குறிப்பிட்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினராசா திலீப்குமார் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், நீங்கள் சபை கலைக்கப்படும் என்ற நோக்கில் காலத்தை கடத்துகின்றீர்கள். இதனால் அந்த இளைஞர்களுக்கான நீதி கிடைக்கப் பெறாது எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.ஸ்ரீபன் ராஜன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்து விட்டது என்றால் அதில் என்ன விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனை அறியும் வகையில் அதனை எங்களுக்குத் தரத் தானே வேண்டும் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.தம்பிராஜா இராஜேந்திரன் அவர்கள் பேசுகையில், இந்த மைதான விடயத்தில் மேற்கொள்ளப்படவுள்ள தீர்மானத்தினை நானும் கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்களும் எதிர்ப்பதாக தெரிவித்ததுடன், இதனை கூட்டக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதற்கு கௌரவ உறுப்பினர் திருமதி.சசிகலா விஜயதேவா அவர்களும் தனது உடன்பாட்டினைத் தெரிவித்தார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், கௌரவ உறுப்பினர்கள் இருவர் தமது எதிர்ப்பினை தெரிவித்துள்ள நிலையில் இதனை ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.புஸ்பராஜ் ரூபராஜ் அவர்களால் கடந்த 11.02.2021ந் திகதி நடைபெற்ற மாநகர சபையின் 44வது அமர்வினில் கொண்டு வரப்பட்ட பிரேரணை தொடர்பில், இது தொடர்பாக முன்னைய சபையினால் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் நீதி மன்றினால் வழங்கப்பட்ட கட்டளை என்பவற்றை தழுவியதாக அதற்கான விடயங்களையும் சிபார்சினையும் பெற்றுக் கொள்ளும் வகையில் நியமிக்கப்பட்ட குழுவினால் கள வியத்தை மேற்கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை என்பவற்றையும் கவனத்தில் கொண்டு குறித்த மயானத்தில் எல்லையிட்டு அப்பகுதி இளைஞர்களால் விளையாட்டிடமாக பயன்படுத்தப்படுகின்ற இடத்தினை கிறவலிட்டு செப்பனிடுவதன் மூலம் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக செயற்படுத்த கௌரவ உறுப்பினர்களான திரு.தம்பிராஜா இராஜேந்திரன் மற்றும் திருமதி. சசிகலா விஜயதேவா ஆகியோர் இத்தீர்மானத்தை தாம் முழுமையாக எதிர்ப்பதாக தெரிவித்த நிலையில் பின்வருவோர் முன்மொழிந்து வழிமொழிய சபையினரால் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், உரிய நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்றி பொருத்தமான உடன்படிக்கை ஒன்றின் ஊடாக மாநகர ஆணையாளர் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**நிபந்தனைகள்:-**

1. விளையாட்டிடமாக பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் எந்தவிதமான கட்டடங்களையும் நிர்மாணிக்க முடியாது.

2. குறித்த சேமக்காலையில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி செயற்பாடு தொடர்பில் குறித்த காணி தேவைப்பட்டு அதனை மாநகர சபை கோருமிடத்து குறித்த தரப்பினர் அக்காணியை மீள கையளிக்க வேண்டும்.
3. மாநகர சபையின் எழுத்து மூலமான அனுமதி இன்றி எந்தவிதமான அபிவிருத்திச் செயற்பாடுகளையும் அங்கு மேற்கொள்ள முடியாது.

**முன் மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு.புஸ்பராஜ் ரூபராஜ்.**
**வழி மொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் திரு. துரைசிங்கம் மதன்.**

➢ **வருமான செலவின அறிக்கையும், நிலுவை வருமான முன்னேற்ற அறிக்கையும்.**

1. 2022 பெப்ரவரி மாதம் முடிவடைந்த நிலையில் எமது மொத்த வருமானம் 15% அறவிடப்பட்டுள்ளது. அதாவது மதிப்பீடு ரூபா.591 மில்லியனில் ரூபா. 87 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. அதாவது மொத்த மீண்டுவரும் வருமானம் ரூபா.520 மில்லியனில் 16%மும், அதாவது ரூபா.84 மில்லியனும், மூலதன வருமானம் ரூபா.72 மில்லியனில் 3% மும் அதாவது ரூபா. 03 மில்லியனும் வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

செலவினத்தை பொறுத்த மட்டில் பாதீட்டுடன் ஒப்பிடுகையில், மொத்த மீண்டு வரும் செலவீனம் 9%மும், அதாவது ரூபா. 34 மில்லியனும், மூலதனச் செலவீனம் ரூபா. 10 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது.

எனவே செலவிலும் மிஞ்சிய மொத்த வருமானமாக ரூபா 42 மில்லியன் காணப்படுகின்றது.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இதனை ஒருவர் முன் மொழிந்து வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார். இதில் அறவீடுகள் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அவற்றினை அறவீடு செய்வதற்கு ஆணையாளர் அவர்கள் சரியான திட்டமிடலை வகுத்து செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

2022 பெப்ரவரி மாதத்திற்கான பண வரவு - செலவுகள் மற்றும் நிலுவை வருமான அறவீடுகள் பரிசீலிக்கப்பட்டு பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. துரைசிங்கம் மதன்.**
**வழி மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. சச்சிதானந்தம் கமலரூபன்.**

2. 2022 மார்ச் மாதம் முடிவடைந்த நிலையில் எமது மொத்த வருமானம் 18% அறவிடப்பட்டுள்ளது. அதாவது மதிப்பீடு ரூபா.591 மில்லியனில் ரூபா. 108 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. அதாவது மொத்த மீண்டுவரும் வருமானம் ரூபா.520 மில்லியனில் 20%மும், அதாவது ரூபா.104 மில்லியனும், மூலதன வருமானம் ரூபா.72 மில்லியனில் 5%மும் அதாவது ரூபா.4 மில்லியனும் வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

செலவினத்தை பொறுத்த மட்டில் பாதீட்டுடன் ஒப்பிடுகையில், மொத்த மீண்டு வரும் செலவீனம் 14%மும், அதாவது ரூபா. 56 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

எனவே செலவிலும் மிஞ்சிய மொத்த வருமானமாக ரூபா 37 மில்லியன் காணப்படுகின்றது.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், இதனை ஒருவர் முன் மொழிந்து வழி மொழியுமாறு கேட்டுக் கொண்டார்.

2022 மார்ச் மாதத்திற்கான பண வரவு - செலவுகள் மற்றும் நிலுவை வருமான அறவீடுகள் பரிசீலிக்கப்பட்டு பின்வருவோர் முன் மொழிந்து வழி மொழிய சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**முன் மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு.தம்பிப்பிள்ளை சிவானந்தராஜா.**
**வழி மொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் திரு. ஆபிரகாம் ஜோர்ஜ்பிள்ளை.**

- **அஞ்சலி செலுத்தல்.**

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், மாநகர சபையில் கடமையாற்றி மட்டக்களப்பிற்கு பெயர் சேர்த்துத் தந்த காலஞ் சென்ற மாஸ்டர் சிவலிங்கம் அவர்களுக்கு சபை சார்பாக ஒரு அஞ்சலி செலுத்துவதோடு, நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக மக்கள் துயரடைந்துள்ளார்கள், ஆட்சியில் பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் சிலர் உயிர் இழந்திருக்கின்றார்கள். எனவே இரண்டுக்கும் சேர்ந்து ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என கூறினார்.

இதன் போது கௌரவ உறுப்பினர் திரு. கந்தசாமி ரகுநாதன் அவர்கள் பேசுகையில், அத்துடன் மே 18ல் முள்ளிவாய்க்காலில் உயிர் நீர்த்த உறவுகளுக்குமாக சேர்த்து மௌன அஞ்சலியை செலுத்துவோம் எனக் கேட்டுக் கொண்டார்.

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், முள்ளிவாய்க்காலில் எமது உறவுகள் பழியான மே 18 தினத்தினையும் நினைவு கூர்ந்து எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரு நிமிட மௌன அஞ்சலியை செலுத்துமாறு சபையினரைக் கேட்டுக் கொண்டார்.

அமரத்துவமடைந்த மாஸ்டர் சிவலிங்கம் அவர்களையும், நாட்டில் ஏற்பட்டுள்ள பஞ்சம் பட்டினி விலையேற்றம் என்பவற்றுக்காக குரல் கொடுக்கும் வகையில் இடம் பெற்று வந்த அமைதி வழிப் போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அத்து மீறல்கள் காரணமாக உயிர் நீர்த்த உறவுகளையும் மற்றும் வைகாசி 18 இல் முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற வன்செயலினால் உயிர் நீர்த்த எம் உறவுகளையும் நினைவு கூர்ந்து சபையில் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு அது **ஏகமனதாக** நிறைவேற்றப்பட்டது.

- **கௌரவ உறுப்பினர் திரு.அப்துள்காதர் முகம்மது லத்தீப் அவர்களின் கன்னி உரை.**

கௌரவ முதல்வர் அவர்கள் பேசுகையில், புதிதாக எம்முடன் இணைந்து கொண்டுள்ள கௌரவ உறுப்பினர் திரு.அப்துள்காதர் முகம்மது லத்தீப் அவர்கள் தனது கன்னி உரையினை நிகழ்த்த அனுமதி கோரியிருந்தார். அவருக்கான சந்தர்ப்பம் தற்போது வழங்கப்படுவதாகத் தெரிவித்து உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.அப்துள்காதர் முகம்மது லத்தீப் அவர்கள் தனது கன்னியுரையினை நிகழ்த்துகையில், அனைவருக்கும் காலை வணக்கம், கௌரவ மாநகரத்தின் முதல்வர் அவர்களே, மதிப்பிற்குரிய மாநகர ஆணையாளர் அவர்களே, பிரதி முதல்வர் அவர்களே, பிரதி ஆணையாளர் அவர்களே மற்றும் மாநகர சபையின் வட்டார அங்கத்தவர்களே, மாநகர சபையின் உத்தியோகத்தர்களே, ஊழியர்களே, சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது மட்டக்களப்பு மாவட்டத்திலே

லாயிலாக இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ் இஸ்லாமிய மக்களும், சிவபெருமானுக்கும் குந்திதேவிக்கும் பிறந்த முருகப் பெருமானை வழிபடும் சைவ மக்களும், ஈசான்நபியை யேசுநாதராக ஏற்று அமேன் கூறும் கிறிஸ்தவ மக்களும் ஒன்றாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நமக்குள் எந்தவிதமான பிரச்சனையுமில்லை, எந்தவித கசப்புமில்லை. இந்த வாழ்க்கை தொடர்ந்து வர நம் தெய்வங்கள் எல்லாம் எமக்கு உதவி செய்ய வேண்டும். நான் இந்த சபைக்கு மிகவும் பிற்பட்ட காலத்தில் வந்திருக்கின்றேன். முக்கிய காரணம் எனது மஞ்சந்தொடுவாய் கிராமம் 2021, 2022 காலங்களில் போதிய அபிவிருத்தி செய்யப்படவில்லை. அந்த அபிவிருத்தியை கருத்திற் கொண்டு தான் மிகவும் கஸ்டத்தின் மத்தியில் இங்கு அங்கத்தவராக வந்திருக்கின்றேன். நான் அங்கத்தவராக வருவதற்கு வழி செய்த ஏறாவூரைச் சேர்ந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கௌரவ சுபைர் அவர்களுக்கும், இன்னும் சில நண்பர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதாவது மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் எனது மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் உள்ள நூற்றுக்கு எண்பது வீதமான மக்கள் ஏழைகள். அவர்கள் அன்றாடம் தொழில் செய்து சீவித்து வருபவர்கள். மழைக் காலங்களில் எமது பகுதிகளில் வெள்ளம் தேங்கி நின்று பல வீதிகள் சேதமடைந்துள்ளன. எமது பகுதிகளில் மணல் ஒழுங்கையும் இருக்கின்றது. கிறவல் வீதிகளும் இருக்கின்றது. கொங்கிறீட் போட்ட பாதைகளும் இருக்கின்றது. இதனால் மழைக் காலங்களில் கஸ்டத்தினை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். ஆகையால் எமது மஞ்சந்தொடுவாய் பகுதியின் நிலையை அனைத்து வட்டார உறுப்பினர்களும் கருத்திற் கொண்டு ஒரு சில அபிவிருத்தி வேலைகளை செய்வதற்கு நீங்கள் எல்லோரும் உதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு தனது கன்னியுரையை நிறைவு செய்து அமர்ந்தார்.

இறுதியில் கௌரவ முதல்வர் அவர்கள் அனைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இன்றைய அமர்வு இத்துடன் நிறைவு பெறுவதாக அறிவித்தார்.

** சபை பிற்பகல் 12.30 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது **

| **தயாரித்தவர்:** | **சரிபார்த்து உறுதிப்படுத்தியவர்:** |
|---|---|
| திரு.சி.ராஜ்மோகன்<br>பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்<br>சபைப் பகுதி. | நா.மதிவண்ணன்<br>மாநகர ஆணையாளர்.<br>(பதில் செயலாளர்)<br>மாநகர சபை, மட்டக்களப்பு |

**தியாகராஜா சரவணபவன்,**
கௌரவ முதல்வர்,
மாநகர சபை,
மட்டக்களப்பு